Free Circulation Germany- England

மணி: 70 - ஓசை: 291 மார்கழி. December. 2020

# வெற்றிமணி
Vettimaniy

ESTD 1950

Successful Publishing 26 years IN EUROPE

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

Orientalisch
Textilien & Schmuck
30 ஆவது ஆண்டு நிறைவு
தொடர் மலிவு விற்பனை
Königswall 16 (Am Hbf)
44137 Dortmund
Tel:0231 162377

# புத்தாண்டும் புதிய சவால்களும்

Dr.IN



## இப்படி ஆக்கப்பட்டவள் நான்



2021 HAPPY NEW YEAR

எங்கள் இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்

## அரசியல் களம்

கொழும்பிலிருந்து ஆர்.பாரதி




## பூனைக்கு மணிகட்டுவது யார்?



தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி

# உ0உ0 ஆண்டு வருடிச் சென்றதா? வாரிச் சென்றதா?




● மு.க.சு.சிவகுமாரன்

ஒவ்வொரு ஆண்டும் முடியும் போது ஒரு குதூகலம் மனதில் எழும். புது வருடம் பிறக்கின்றது என்பதே அந்த புத்துயிர்ப்பின் காரணம். அதற்காக முன்னைய ஆண்டு சிறந்தது அல்ல என்பது பொருள் அல்ல. பலரது வாழ்வையும் ஏதோ ஒருவிதத்தில் மகிழ்வையும், துன்பத்தையும் தந்தே அந்த ஆண்டும் கடந்து சென்றிருக்கும்.

ஆனால் எவரும் 2020 ஆண்டை வாழ்வில் மறக்க முடியாதபடி முற்றாகத் திருப்பிப் போட்ட ஒரு ஆண்டாகத் திகழ்கின்றது. எப்போது இந்த ஆண்டு கடந்துபோகும் என்ற எண்ணமே யாவரது மனதிலும் இப்போது உள்ளது. ஏதோ இந்த வருடம் போனால் கொரோனாவும் அதனுடன் கைகோர்த்து சென்றுவிடும் என்ற ஒரு அற்ப ஆசையே காரணம்.

நாம் புலம்பெயர்ந்து வந்து இங்கு மட்டுமல்ல, தாய்மண்ணிலும்தான் எத்தனை விதமான கொரோனாக்களுடன் வாழ்ந்து பழக்கப்பட்டனாங்கள். இருந்தாலும் இது கண்ணுக்குத் தெரியாத ஒரு வைரஸ். சிரமம்தான்! இருந்தாலும் அதனுடனும் நாம் வாழக்கற்றுக் கொள் வேண்டும். இது கட்டாயம் அல்லாத கட்டாயம்.

ஒரு வீட்டை இடிக்காமல், அது இருக்கத்தக்கதாகவே வீட்டை எமக்கு ஏற்றவாறு மாற்றி அமைப்பதுபோல, நாமும் அது இருக்க எமது வாழ்க்கை முறைகளை மாற்றி அமைப்போம்.

அதற்காக நாம் நம்மை நாமே தொலைத்து விடாமல் அவதானமாக இருப்போம்.

திருவிழாக்கள், விழாக்கள், திறப்பு விழாக்கள், திருமணங்கள் எல்லாம் சூமாகி விடாது பார்த்துக் கொள்வோம். பாதுகாப்பாக நடந்து கொள்வோம். நிலவுக்குப் பயந்து பரதேசம் போன கதை வேண்டாம்.

சென்ற வருட இனிய நினைவுகளை அசை போட எதுவும் இல்லை என்ற கவலையை




விடுங்கள். நாம் ஒரு சோதனைக் காலத்தை எப்படி எதிர்கொள்வது என்பதனை நன்கு கற்றுக்கொண்ட ஆண்டாக எண்ணி மகிழுங்கள்.

நம்மை வருடிச் சென்ற காலம் அல்ல 2020. பலவற்றை வாரிச்சென்றகாலம் அது.

உங்கள் உறவுகள் முதல், உங்கள் அபிமானமான பாடகரான பாடும் நிலா எஸ்.பி.பாலசுப்பிரமணியம் வரை வாரிச்சென்றது இந்த வைரஸ்.

யேர்மனியில் இறுதியாக நடந்த பெருவிழா வெற்றிமணி மகளிர் தினவிழா [08.03.2020] அதற்குப்பின் பெருவிழாக்கள் ஏதும் இல்லை. திருவிழாக்களும் இல்லை! யாவும் நடைபெறமுடியாது போயின. 2021 ஆம் ஆண்டு எதற்கும் எம்மைத் தயார்படுத்த வேண்டும். யாவும் இயல்பு நிலைக்கு வரவேண்டும். அரசின் சுகாதார ஆலோசனைகளுடன் நீங்களாகவே உங்கள் உடல் ஆராக்கியத்திற்கு ஏற்ற சட்டதிட்டங்களை அமைத்துக்கொண்டு வாருங்கள். வாரிச்சென்ற ஆண்டை வழியனுப்புவோம்! மெல்ல வருடிச்செல்லும் ஆண்டாக 2021ஆம் ஆண்டை வரவேற்போம். உரிய சோதனைகளுக்கு எம்மை உட்படுத்தி மீண்டும் பறப்போம். பாதுகாப்போடு வழமைக்குத் திரும்புவோம். வாழ்க்கை என்பது உயிருடன் இருப்பது என்பது மட்டும் பொருள் அல்ல. மனநோயாளியாகாமல் நம்மையும் பாதுகாத்துப் பிறரையும் பாதுகாப்போம்.

கோவிட்–19 தடுப்பூசி இதோ வருகிறது அதோ வருகிறது! வந்தால் மகிழ்ச்சிதான். இந்தத் தடுப்பூசியாலும் இணையத்துள் மக்கள் கரைந்து போவதைத் தடுப்பது என்பது சந்தேகமே!

**அனைவருக்கும் எங்கள்**
**நத்தார் புத்தாண்டு வாழ்த்துகள்.**











வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 291


ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
‘ஓவிக்கலைவேள்’
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Edito:
Dr.M.K.S.Sivakumaran B.F.A



Tel: +49 01631992333

+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com


“வெற்றிமணிமொழி’
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


Vettimaniy Ltd
Company No: 8876276


# ‘குட்டி சீனா’வாகும் அம்பாந்தோட்டை இந்தியாவின் பிரதிபலிப்பு என்ன?





கொழும்பிலிருந்து
ஆர்.பாரதி

உலகின் முன்னணி டயர் உற்பத்தி நிறுவனமான சீன ஷாங்டொங் ஹாஹவா டயர் நிறுவனம் 300 பில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்து அம்பாந்தோட்டை துறைமுக தொழிற்துறை பூங்காவில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைக்கான ஒப்பந்தம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கைச்சாத்திடப்பட்டது. கொரோனாவினால், இலங்கையின் பொருளாதாரம் பாரிய பின்னடைவைச் சந்தித்திருக்கும் நிலையில், இந்த உடன்படிக்கை நவம்பர் 19 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டமை முக்கியமான ஒரு செய்தியைச் சொல்லியிருக்கின்றது.

இலங்கையின் பொருளாதாரத்துக்கு உதவ சீனா தயாராக இருக்கின்றது என்பதுதான் அந்தச் செய்தி. ‘கடன் உதவிகளைத் தருவது மட்டும் எமக்குப் போதுமானதல்ல முதலீடுகளைச் செய்யுங்கள்’ என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சீனாவிடம் தெரிவித்த அடுத்த நாளே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது. அம்பாந்தோட்டையைப் பொறுத்தவரையில் அது ஒரு ‘குட்டி சீனா’வாக மாறிக்கொண்டிருக்கின்றது. அம்பாந்தோட்டை துறைமுகமும் சீனாவினால்தான் அமைத்துக்கொடுக்கப்பட்டது. இப்போது செய்யப்பட்டுள்ள பாரிய முதலீடு இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் மேலோங்குவதற்கான மற்றொரு உதாரணம்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் மைக் பொம்பியோவின் இலங்கை விஜயத்தையடுத்து, சீனா குறித்து மேற்கு நாடுகள் எவ்வாறான அணுகுமுறையைக் கொண்டுள்ளன என்பது வெளிப்படையாகியது. குறிப்பாக, இந்தியாவைத் திருப்திப்படுத்த வேண்டிய தேவை ஒன்றிருப்பதை இலங்கை உணர்ந்தது. அதற்கான முக்கியமான இராஜதந்திர நகர்வு ஒன்றையும் கோட்டாபய அரசாங்கம் மேற்கொண்டது. நீண்டகாலமாகவே சர்ச்சைக்குரிய ஒன்றாக இருந்துவந்த கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் உடன்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோவின் இலங்கை விஜயத்தின் தொடர்ச்சியாகவே இதற்கான முடிவை கொழும்பு எடுத்திருப்பதாகத் தெரிகின்றது. இலங்கையில் அதிகளவில் காணப்படும் சீனாவின் ஆதிக்கம் தொடர்பில் கடும் தொனியில் மைக்



பொம்பியோ தெரிவித்த கருத்துக்கள், இந்தியாவின் உணர்வுகளைப் பெருமளவுக்குப் பிரதிபலிப்பதாகவே அமைந்திருந்திருந்தது. அதன் தொடர்ச்சியாகவே புதுடில்லியைச் சாந்தப்படுத்தும் ஒரு செயற்பாடாக கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தத்தை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கும் முடிவை கொழும்பு எடுத்திருப்பதாகத் தெரிகின்றது. சீனாவின் ஆதிக்கத்தை சமப்படுத்தும் ஒரு முயற்சியாக இந்த நகர்வை கொழும்பு மேற்கொண்டிருந்தாலும், புதுடில்லியும், அமெரிக்காவும் இதனால் சாந்தமடையுமா என்ற முக்கியமான கேள்வி உள்ளது. அதேவேளையில், அம்பாந்தோட்டை குறித்த புதிய உடன்படிக்கையும் இந்தியாவை குழப்பத்துக் குள்ளாக்கலாம்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் கைச்சாத்திட்டிருந்தபோதும், அந்தத் திட்டம் இதுவரை செயற்படுத்தப்படாத நிலைதான் இருந்தது. கொழும்பில் இடம்பெற்ற ஆட்சி மாற்றங்களும், அரசியல் குழப்பங்களும்தான் இதற்குக் காரணம்.

2015ஆம் ஆண்டு 500மில்லியன் டொலர்களில் இத் திட்டத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

2016ஆம் ஆண்டு மைத்திரி–ரணில் அரசாங்கதில் உருவான குழப்பங்களினால் அது கைவிடப்பட்டிருந்தது. அதனைச் செயற்படுத்தப்போவதில்லை என அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாகவே அறிவித்திருந்தார். ஆனால், அதனைச் செயற்படுத்த வேண்டும் என்பதில் ரணில் விக்கிரமசிங்க அக்கறையாக இருந்தார்.

2019ஆம் ஆண்டு மே மாதம் இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஆனால் அதே ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னரான சூழலில், அந்த ஒப்பந்தம் பற்றி எதுவுமே பேசப்படவில்லை. அது பெருமளவுக்குக் கைவிடப்பட்டுவிட்ட ஒரு நிலைதான் காணப்பட்டது. துறைமுக தொழிற்சங்கங்கள், கொடுத்த அழுத்தம், சிங்களத்

28 ஆம் பக்கம் பார்க்க...







கே.எஸ்.சுதாகர்
அவுஸ்திரேலியா

# புத்தக வெளியீட்டு விழா அழைப்பிதழ்



"முதலாவது அழைப்பிதழை யாருக்குக் குடுக்கலாம்?'' மனைவியிடம் ஆலோசனை கேட்டான் அகமுகிலன்.

''உங்களுக்குப் பிடிச்ச பேராசிரியர் சிவராசாவுக்குக் குடுங்கோவன்''.

அதுவே சரியெனப்பட்டது அகமுகிலனுக்கு. மாலை நான்கு மணியளவில் சிவராசாவைச் சந்திப்பதற்காக நகரத்துக்கு பஸ் ஏறினான் அகமுகிலன். நகரத்தில் பல்கலைக் கழகத்திற்கு அண்மையாக சிவராசா இருக்கின்றார். அவரது வீடு நோக்கிப் போய்க் கொண்டிருக்கும்போது, எதிர்ப்புறமாக சிவராசாவும் மனைவியும் வந்து கொண்டிருந்தார்கள். வேட்டி நாஷனலுடன் பேராசிரியர் ஜோராக இருந்தார். மனைவி காஞ்சிபுரப்பட்டு, தலை நிறையப் பூக்களுடன் சரக்குச் சரக்கென்று பாதங்களைத் தூக்கிப் பக்குவமாக நிலம் நோகாமல் அடியெடுத்து வந்து கொண்டிருந்தார்.

''சேர் உங்களைத் தேடித்தான் வந்துகொண்டிருக்கிறன்''.

''நாங்கள் ஒருக்கால் கோவிலுக்குப் போவம் எண்டு வெளிக்கிட்டனாங்கள். ஏன் என்ன விஷேசம்?''

''புத்தக வெளியீட்டுவிழா ஒண்டு வருகுது. தங்களுக்கு முதலாவது அழைப்பிதழைத் தருவோமெண்டு வந்தனான்''.

பேராசிரியரின் மனைவி பதறியடித்துக் கொண்டு அப்படியே நின்றார்.

அழைப்பிதழ் ஒன்றினைப் பவ்வியமாக எடுத்து சிவராசாவிடம் நீட்டினான் அகமுகிலன்.

''நல்லது. நல்லது. எத்தினையாம் திகதி மட்டிலை?'' அழைப்பிதழை விரித்துப் படிக்கத் தொடங்கினார் சிவராசா. அழைப்பிதழைப் படித்தால் அவருக்குப் ஹபிரம்மஹத்தி தோஷம் பீடித்துவிடும் என்பதுமாப் போல், அவரிடமிருந்து அதைப் பறித்தெடுத்தார் மனைவி. ''அழைப்பிதழைப் பார்த்த மாத்திரத்தில் அவரின் ஹபிளட் பிறசர்' எகிறிப் பாய்ந்தது. செவ்விதழ் அஸ்ட திக்குகளிலும் சுருங்கிப் போயின. தன் மூக்குக்கண்ணாடியை கையினால் மிதத்தி அகமுகிலனைப் பார்த்தார். செவ்வக வடிவில் இருந்த புத்தக வெளியீட்டுவிழா அழைப்பிதழ், அவர் உள்ளங்கைக்குள் அறுகோண வடிவமாகி சுருங்கத் தொடங்கியது.

''நீரும் வாருமன் கோவில் மட்டும் போட்டு வருவம்''.

''கோவில் சன்நிதியிலை அழைப்பிதழ்களை வைச்சு எடுத்தால் நல்லது எண்டு, வரேக்கை போட்டு வாறன்''.

பேராசிரியரின் மனைவியார் அழைப்பிதழை ஆராதிக்கின்றாரா எனக் கடைக்கண்ணால் இடைக்கிடை நோட்டமிட்டான் அகமுகிலன். அவர் கையில் அழைப்பிதழைக் காணவில்லை. திடுக்கிட்டுப் போனான் அகமுகிலன். அது பூகோளமாகச் சுருண்டு உள்ளங்கைக்குள் அடங்கி இருப்பது போலத் தென்பட்டது.

பலதும் பத்துமென இருவரும் கதைத்துக் கொண்டு கோவில் நோக்கிச் செல்கின்றார்கள். இருபுறமும் கிழுவை வேலிகள் வரிசை கட்டி வெய்யிலுக்கு இதமாக இருந்தன. ஒரு வளைவில், திடீரென பேராசிரியரின் மனைவியின் செருப்படி ஓசை வித்தியாசமாகக் கேட்க திரும்பிப் பார்த்தான் அகமுகிலன். உள்ளங்கையில் சுருங்கிக் கிடந்த அழைப்பிதழைத் தூக்கிப் போட்டு, காலின் மேற்புறத்தால் ஒரு 'ஹகிக்'. அது கிழுவை வேலிக்குள் போய்ச் சொருகிக் கொண்டது. ஒன்றுமே நடவாதது போல சரக் சரக் என்று தொடர்ந்து வந்து கொண்டிருந்தார் அவர். கோவில் வந்துவிட்டது.

''இஞ்சாருங்கோ உங்களுக்கு கால்ப்பந்தாட்டப் போட்டிக்கு நடுவராகக் கூப்பிட்டது எண்டு சொன்னனியளல்லோ! அது எப்ப?''

''சேர்... மறந்திடாமல் வந்திடுங்கோ'' பேராசிரியரின் மனைவி சொன்னதையும் பொருட்படுத்தாமக் அகமுகிலனின் குரல் ஓங்கி ஒலித்தது.

அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான் அகமுகிலன்.

அகமுகிலன் போய்விட்டதை உறுதிப்படுத்திக் கொண்டபின்,

''நீங்கள் பேராசிரியர் தானே! புத்தகத்தை வெளியிட்டு தலைமையுரை செய்யச் சொல்லிக் கேட்டிருக்கலாம் தானே? அல்லாட்டி புத்தகத்தைப் பற்றியாவது பேசச் சொல்லிக் கேட்டிருக்கலாம் அல்லவா? சும்மா பார்வையாளரகாப் போகப் போறியளோ? இல்லைத் தெரியாமல் தான் கேட்கிறன் அவ்வளவுக்குத் தாழ்ந்து போய் விட்டியளோ நீங்கள்?'' கர்ச்சித்தார் பேராசிரியரின் மனைவி.

''எங்கேயுமப்மா அந்த அழைப்பிதழை ஒருக்கால் தாரும் பாப்பம்'' என்றார் பேராசிரியர்.

''இருந்தால் தானே தாறதுக்கு?'' என்றார் மனைவி.

# யாழ்ப்பாணத் தமிழ்!

யாழ்ப்பாணத்துக்குச் சென்று வந்த எங்கள் தமிழ் அறிஞர் ஒருவர் என்னிடம் கூறினார். அவர் பிரயாணம் செய்த ரயில் வண்டியில் எதிர் இருக்கையில் அமர்ந்திருந்த ஒரு யாழ்ப்பாணத்துத் தாய் தன் மடியில் இருந்த சிறு குழந்தைக்கு ஜன்னல் ஊடாக நிலவைக் காட்டி என்ன வடிவான நிலவு அங்கே பார் என்று சொன்னாளாம். அவர் அதிர்ந்து போனாராம்.

அழகு என்பதற்கு சரியான தமிழ் வடிவு என்பதே. ஏனென்றால் வடிவம் ஒன்றில் இருந்து தோன்றுவதால் அது வடிவு. அது பண்புப் பெயர். அந்த உயர் தமிழைத் தாய் பயன்படுத்திய போது மடியில் இருந்த குழந்தை விளங்கிக் கொண்டு நிலவைப் பார்க்கின்றது. நான் வியப்போடு அதைப் பார்த்தேன் என்று என்னிடம் சொன்னார்.

உடனே நான் அவருக்குச் சொன்னேன். அவள் தமிழிச்சி. அவர்கள் தமிழர்கள். அவர்களின் இலக்கண நூலாகக் கற்பிற்கப்படுவது தொல்காப்பிய வழி வந்த இலக்கணம். ஆதனால் அந்த மக்கள் உயர்வான தமிழைப் பேசுகின்றார்கள் என்று சொன்னேன். ஒரு உரையாடலில் தமிழ் அறிஞர் மு.வரதராஜன் அவர்கள் சொன்னது.

**இரா.சம்பந்தன்**






அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# இப்படியாகப்பட்டவள் நான்



கவிதா லட்சுமி
(நோர்வே)

பெரும் ஆசைகள் கொண்டவள் நான். பேராசைக்காரியென்ற ஒரு சொல்லில் என்னை அடக்கிவிடமுடியாது. எனது கனவுகளுக்கும் கூட இரவுகளின் நீளம் போதுவதில்லை. தினமும் பாருங்கள், கனவுகள் எதுவும் முழுமைபெறாமலேயே விடிந்துவிடுகிறது. உணவோ, பொருளோ, பொன்னோ, மண்ணோ எதுவும் என்னை திருப்தி கொள்ளவிடுவதில்லை. இளவரசியைப்போலவும், சாண்டில்யன்கதையில் வரும் வெண்குதிரை நாயகர்களின் நாயகியாகவும் நான் கண்டகனவுகள் எல்லாம் சிறுபிராயத்துக் கனவுகள்தான். எனது கனவுகள் அடங்காத குணமுடையவையாகப் பெருகி நிற்கின்றன. கண்ணகியாகவும், மணிமேகலையைத் தந்த மாதவியாகவும், நானே மணிமேகலையாகவும் இருந்திருக்கிறேன். பதின்மவயதிலேயே அதுவும் போதாது என்று ஆயனரின் சிவகாமி, பொன்னியின் செல்வன் கதைப் பூங்குழலி, நந்தினி, இப்சனின் நூரா, எல்லீடா மற்றும் சோபியாவின் உலகத்தில் சோபியா என நான் கூடுபாயாத கதாபாத்திரங்களே கிடையாது. மிக முக்கியமாக நான் எப்போதும் ஒரு எதிர்மறையான பாத்திரங்களிலே தான் பிடிப்புடையவள். அனைத்துப்பிறவியும் எனதே. இந்தப்பிறப்பிலேயே இத்தனை பாத்திரங்களுள் கூடுபாய்ந்தும் அடங்காத ஆசை கொண்டவள் நான்.

உடலுக்குச் சூரியக்கதிர் வாங்கவெனத் தேசம் கடந்து கடற்கரைக்குப் போகின்ற பெரும்பான்மையினரோடு நான் என்ன செய்வேன் சொல்லுங்கள். ஐயோ உச்சபட்சமாய் நாலு சுவர்களுக்கு ஆசைப்படுகிறார்கள். நானோ அந்தக்கடலுக்கும் வானுக்கும் சொந்தக்காரி. கற்சுவர்களைப் பெரிதாய் ஆக்குவதில் ஜென்மத்தின் பயனை அடைந்துகொண்டிருக்கும் இவர்கள் கொஞ்சம் உலோகங்களைச் சேர்த்தும் பாதுகாத்தும் வரும் ஒருவித வகை உயிரினத்தைச் சேர்ந்தவர்கள். கொஞ்சம் புல்லும் நாலு சில்லும் இவர்களுக்கு போதுமானதாக இருக்கிறது. எனக்கு இவையெல்லாம் போதுமா என்ன? இந்த உலகை எப்படி என் உள்ளங்கையுள் வைத்திருப்பது என்ற யோசனையில் இருப்பவளின் ஆசைகளுக்கான தீனி இல்லை இவைகள்? இந்த உலக உருண்டையே காலின்கீழ் எனது கட்டைப்பெருவிரலின் நுனியில் சுழன்று கொண்டிருக்கையில் இவர்களின் ஆசைகளெல்லாம் சின்னத்தனமான ஆசைகளல்லவா?



தற்காலத்தில் ஒரு வித முத்திரையைச் சுமந்துவரும் பொருட்களுக்கு அடிமையாகிக் கொண்டிருக்கும் மனிதர்களைக் காண்பது எனக்குச் சிரிப்பு மூட்டுகிறது. ஒரு குதிரைப்படத்தையோ, ஒரு வியாபாரக் கலைஞனின் முத்திரையையோ, பெயரையோ தமது பொருட்களில் சுமப்பதில் ஆலாதி ஆர்வம் இவர்களுக்கு. இப்பிரபஞ்சத்தையே எனக்காக விட்டுத்தந்துவிட்டு வெறும் நுகர்வோர்மயமாதலின் அட்டைப் பெட்டிக்குள் தாமே சென்று சந்தோசமாய் படுத்துக்கொள்கிறார்கள். இந்தச் சின்னத்தனமான ஆசைகள் எல்லாம் என்னிடம் இல்லை. நான் பேராசைபிடித்தவள். சூரியனின் கதிர்கள் எப்படி இந்த உலகத்தின் மீதுள்ள எல்லாவற்றின் மீதும் படுகிறதோ அப்படி இருக்கிறதென் ஆசைகளும். ஒற்றைப் பூவிலிருந்து அலைகடல், மலைத்தொடர், வானம், நிலவு என ஒரு பறவை தொட்டு வருகிறது. அதைவிட மேலானதொரு ஜென்மம் வேண்டிநிற்பவள் நான். என்னிடம் இந்த முத்திரை பொதிந்த பொருட்கள் ஏன் இல்லை என்றால் நான் என்ன சொல்வது சொல்லுங்கள்?

ம்.. இந்த உலகம் ஒரு உருண்டையாகத்தான் இருக்க வேண்டுமா என்ன? நானே ஒரு உலகம். எனது வாழ்வில் மாபெரும் காதல் கொண்டிருக்கும் ஒரு சுயபிரியை நான். எனது கதையையே இன்னும் மிகவும் இரசித்துக்கொண்டிருக்கிறேன். அதுவே இன்னமும் முடிவுக்கு வரவில்லை. புனிதப்போர்வைக்குள் நாம் குப்புறக் கிடத்தியிருக்கும் காதலையும், மணவாழ்வையும் கூட உலுப்பி எழுப்பி எனது உலகின் அருகில் வைத்திருக்கிறேன். காதலர்களும் பலபல உண்டெனக்கு. எல்லாரும் போல முதற்காதல் உண்டு என்றாலும் அது முடிந்த பின்னே நான் எந்தவித நடிப்புக்கும் என்னை ஒப்புக்கொடுக்காததால் கௌதமனும், திரிபுரனும், பாரதியும், பித்தனும், இரவிவர்மனும் என்னைக் காதலிக்கத்தொடங்கினர். இதை நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும். போதாதென்று எனக்கு ஒரு பெண் மேலும் பொல்லாத காதலுண்டு. கோதையென்ற அழகான பெயர் அவளுக்கு. இதை நீங்கள் கேவலாமாகவும் தவறென்றும் சொல்வீர்கள். எனக்குத் தெரியும். மனிதக் காதல் எல்லாம் வரவர மண்ணாங்கட்டியாகத்தான் எனக்கும் தெரிகிறது.

ஒரு நாட்டை என்னிடம் கையளித்தாலும் திருப்தி கண்டுவிடும் மனநிலையில் நான் இல்லை இப்போது. இத்தனை காதலர்கள் இருந்துமே என்னதான் நடந்துவிட்டது? மனம் திருப்தி கொள்ளவில்லை இன்னும். எனது ஆசைகளின் எல்லை எங்கென்று எனக்கே தெரியவில்லை. அதுதான் சொல்லியிருக்கிறேனே எல்லைக்கோடுகள் எல்லாம் இப்போது எனது குதிக்கால் வெடிப்புகள் ஆகிவிட்டன என்று. அதனால்த்தான் சொல்கிறேன். தற்போது நீங்கள் கேவலமாக யோசிப்பதையெல்லாம் மற்ற எண்ணங்களோடு சேர்த்து இதையும் கொஞ்ச நேரம் நிறுத்தி வையுங்கள். நீங்கள் என்னதான் எண்ணிக்கொண்டிருந்தாலும் அந்த எண்ணம் என்னையோ எனது ஆசைகளையோ எதுவும் செய்துவிடப்போவதில்லை. நீங்கள் சிறகுகளைப் புடுங்கிவிடும் போதெல்லாம் ஒரு விளக்குமாற்றுக் கட்டையின்

06 ஆம் பக்கம் பார்க்க...



அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# பட்டாம் பூச்சிச் சுமைகள்



பொலிகையூர் ரேகா
(தமிழ்நாடு)

ஒடிந்துவிடுவோமென்று
தெரிந்தும்
வலிந்து ஏற்றப்பட்டவற்றை
சுமந்து செல்கையில்
தன்னம்பிக்கையென்று
புகழப்படுவனவெல்லாம்
ஏதோவொரு நாளில்
உடைந்துபோகும்
நொடிகளிலே
முட்டாள்தனமென
ஆகிவிடுகின்றது!

பட்டாம்பூச்சிச் சிறகில்
பாறாங்கல்லைக் கட்டிச்
சுமத்தலே அதன்
தன்னம்பிக்கையென்பதும்
ஏதோவொரு வகையில்
விதி மீறல்தான்!
அதை விதியென்று கூறிப்
பறக்கச் சொல்தலும்
கைதட்டி உற்சாகப்படுத்தலும்
எப்போதும்
நியாயமாகிவிடாது!

சோதனைகளைத்
தாண்டி வருதலே
சாதனையென்று
கூறுவோர்க்குத்
தாண்டத் தாண்டச்
சோதனைகள் மட்டுமே
தொடர்தலென்பது கவனத்தில்
வராமலே போகலாம்!

சக்திக்கு மீறிய சோதனைகள்
சாதனைகளாகளாம்தான்!
எல்லாமும் எப்போதும்
சாதனையாவதில்லையென்ற
எதார்த்தத்தையும்
இந்த உலகம்
உணர்ந்தாக
வேண்டியுள்ளது!

ஓட்டப் பந்தயத்தில்
ஓடி ஓடிக் களைத்து
வெற்றிக்கோட்டை அடைந்தே
இறந்தவன் நிலையை
வரலாறுகள் மட்டுமே பேசும்;
இறந்தவன் இறந்தவனாகவே
இழந்துவிடுகிறான்!

எல்லாப் புகழின் பின்னாலும்
மறை(ற)க்கப்பட்ட
பெரும்வலிகள்
ஆழமாகவேயிருக்கும்
ஆறாத ரணங்களாய்!
ஏமாந்துபோன வலிகள்
பழகிப்போயிருக்கும்
அன்றாட நிகழ்வாக!

பட்டாம்பூச்சிச் சிறகில்
பாரமேற்றாதீர்கள்!
அவற்றிற்கு எந்தத்
தன்னம்பிக்கையும்
தேவையில்லை!
புழுவிலிருந்து பறத்தல்வரை
அவை சுயமாகவே
முன்னேற்றம் கண்டவை!
ஒடிந்துவிடுமென்று தெரிந்தும்
தைரியமளிக்காதீர்கள்!
அவற்றின் சுதந்திரம்
பறத்தலில்தான் உள்ளது!
பாரம் சுமப்பதிலல்ல!

அறியாமைகளை
எடுத்துரையுங்கள்!
தன்னம்பிக்கையளிப்பதாய்
நினைக்கும் உங்கள்
அறியாமைகளில்
சிறகுகள் ஒடிந்து
உடைந்த பின்
பரிதாபப்பட்டுப் பேசுவதற்கு
எதுவுமேயில்லை!
உடைந்த சிறகுகளை
ஒட்ட வைத்துப் பறக்க
அவை இயந்திரப்
பட்டாம்பூச்சிகளல்ல!
இந்தச் சமுதாயத்தின்
சதிகளில் இரையாகிப்போன
பட்டாம்பூச்சிகள்!

பட்டாம்பூச்சிச் சிறகுகளில்
பாறங்கல் சுமைகள்
ஏற்றாதீர்கள்!
இயல்பு மீறிச் சுமப்பது
தன்னம்பிக்கையாகிவிடாது!
இயல்பு தொலைத்த
உலகமாய் இருந்தாலும்
சக்திக்கு மீறிய சுமைகள்
இயல்பு மீறிய கணக்கிலேயே
சேர்ந்துகொள்ளும்!

பட்டாம்பூச்சிகள்
பட்டாம்பூச்சிகளாகவே
வலம் வரட்டும்!
இயல்பு தொலைத்த
இழி நிலையில் வரும்
தன்னம்பிக்கை அவற்றிற்கு
ஒருபோதும் வேண்டாமே!

## இப்படியாகப்பட்டவள் நான்

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

மீதேறிக்கூட பறக்கத் தயாராகி விடுகிறேன். பேராசைக்காரி ஒரு சூனியகாரியைப் போன்றவள். இதைச்சொல்வதில் கூட எந்தத் தயக்கமும் எனக்கிருப்பதில்லை. சூனியக்காரியாக இருப்பது எத்தனை அழகு தெரியுமா

மிதமிஞ்சி ஒரு சூனியக்காரியை உங்கள் விமர்சனங்களால், அபிப்பிராயங்களால் அல்லது அதிகபட்சமாக உங்கள் தூசணங்களால் நாலுதடவை சொல்வதில் கொஞ்சம் பெருமையாக உணருவீர்கள். பிறகு? அதை நின்று கேட்கும் ஜடங்களுக்கு என்னதான் செய்வீர்கள்?

உடலை வைத்துச் சிந்திப்பவர்கள். உடலால் சிந்திப்பவர்கள். இவர்களெல்லாம் இந்தச் ஆறடி உடலை விட்டு வெளிவரவே மாட்டார்கள். இருக்கட்டும். எனது இயல்பே என்னால் உடல்களை மட்டும் கிட்டப்பார்வையில் வைத்துப் பார்த்துக் கொண்டிருக்க முடியாமல் இருப்பதுதான். மேலே அமர்ந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருப்பதாகச் சொன்னான் அல்லவா பாரதி? நானோ அவனையும் சேர்ந்துக் கண்காணித்துக் கொண்டிருக்கிறேன் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். இதைச் சொல்வதில்கூட அத்தனை தற்பெருமை எனக்குண்டு. ஆஸ்தீகம் நாஸ்தீகம் பற்றியெல்லாம் அலட்டிக்கொள்வதில்லை நான் என்றாலும், இந்த சுயநல மனதுள் சலனம் இருக்கிறது பாருங்கள். அப்பப்பா! பொல்லாததது.

இந்த ஆறறிவு ஜீவன்கள் ஏன் எப்போதும் ஒரு வீட்டையோ நாட்டையோ கேட்கிறார்கள். இப்படிக் கொஞ்சமாய்க் கேட்காமல் பெரிய ஆசைகளை இவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டாமா? என்னைப் போல முழு உலக உருண்டையை விளையாடக் கேட்கலாம், சூரியகுடும்பத்துக் கோள்களை கேட்கலாம். அந்தக் கடைசி நட்சத்திரங்களுக்குப்பின் என்னதான் இருக்கிறது என்றறிய ஒரு சிந்தனைச் சிறகுவேண்டிப் புறப்படலாம். அதைவிட்டுவிட்டு ஒவ்வொரு பண்டிகைக் காலங்களுக்கும் கலர்கலராய் ஜன்னல் சீலைகளை மாற்றுவதில் ஆர்வமாய் இருக்கிறார்கள். மனித உயிரினங்களின் அதிகபட்ச வேண்டுதல் என்னவென்றால் தம் குட்டிகள் எல்லாம் தம்மைவிடப் பெரிய சுவர்கள் எழுப்ப வேண்டும் என்பதும், இன்னும் கூடுதல் வர்ணங்களில் ஜன்னல் சீலைகளை வாங்கிச் சேர்க்கவேண்டும் என்பதும் தான். நான் எழுதும்விதம் ஒரு மாதிரியாக இருப்பதாக உணர்கிறீர்களா? எந்தச் சந்தேகமும் வேண்டாம் உண்மையிலேயே இப்படியாகப்பட்டவள்தான் நான்.

எந்த மாற்றமில்லாமல் ஆனால் இன்னும் அதிகமாகத் திமிர், கர்வம், பேராசை, அலட்சியம் கொஞ்சம் பைத்தியக்கரத்தனம் என என் அடுத்த ஆண்டும் இப்படியாகவே மலரவிருக்கிறது. என்னை எனக்காகவே ஏற்றுகொண்டவர்க்கும், ஏற்றுக்கொள்ள மனமற்று என்ன செய்வதென்று தெரியாது இருப்போர்க்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

நல்லதும் கெட்டதும் யார் தீர்மானிப்பது சொல்லுங்கள். அது எங்கும் உண்டு. எதை நாடுகிறோம் என்பதே முக்கியம். பேசாமல் இந்த ஆண்டில் என்னோடு சேர்ந்து நீங்களும் பேராசைக்காரராகிவிடுங்கள். ஆசை தீரச் சிறகணிந்து வெளிநுகரப் புறப்படலாம். சேர்ந்தே பாதங்களின் கீழ் கிடக்கும் உருண்டையை சிறு பந்தினைப்போல உருட்டி உருட்டி விளையாடலாம். புத்தாண்டு மலரட்டும்!








# "இனியும் என்னாலை இதுகளைத் தாங்கேலாது"

## தற்கொலை- தடுப்பதற்கான முயற்சி

**ஸ்ரீரஞ்சனி (கனடா)**



தப்பித்தலுடன் தொடர்பான ஒரு செயற்பாடே தற்கொலை எனலாம். தற்கொலை என்பது அந்த நேரத்திலான ஒரு முடிவாக இருப்பது மிகவும் அரிதாகும். பத்துப் பேரில் எட்டு பேர் தற்கொலை செய்துகொள்வதற்கான எண்ணம் இருக்கிறது என்பதைக் காட்டும் அறிகுறிகளைச் சிலருக்கோ அல்லது பலருக்கோ காட்டியிருப்பார்கள் என்கிறது ஆய்வு. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், தற்கொலை என்பது மனக் கிளர்ச்சியிலான ஒரு செயலாகத் தோன்றலாம், ஆனால் அது எழுந்தமானமானதொரு நிகழ்வல்ல, அது ஒரு செயல்முறை என்கின்றனர் ஆய்வாளர்கள்.

தற்கொலையைப் பற்றிப் பேசுவதற்குப் பொதுவில் நாங்கள் எவருமே விரும்புவதில்லை. அத்துடன், எங்களுக்குத் தெரிந்தவர்கள் ஒருவரும் அந்த முடிவுக்கு ஒருபோதும் வரமாட்டார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம். ஆனால், எங்களுக்குத் தெரிந்தவர்களும் தற்கொலையைத் தெரிவு செய்துகொண்டுதான் இருக்கின்றனர். இருப்பினும், தற்கொலை ஒரு களங்கம் என்ற உணர்வு அல்லது அது அவமானம் தரும் ஒரு செயல் என்ற கருத்துப்பாடு எங்களைச் சங்கடப்படுத்துவதால் அதைப் பற்றி நாங்கள் அதிகம் கலந்துரையாடுவதில்லை. அதனால், ஒருவர் உணரும் வலி பற்றியோ அல்லது அவருக்குத் தேவையான உதவி பற்றியோ வெளிப்படையாகப் பேசுவதற்கான சந்தர்ப்பங்களை நாங்கள் இழந்துவிடுகின்றோம்.

தனது வாழ்க்கையை முடிவுக்கு கொண்டுவரவேண்டுமென ஒருவர் முடிவெடுப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். உண்மையில், அந்தக் காரணங்கள் பற்றிய ஒருவரின் உணர்வுகள்தான், அந்தக் காரணங்களை விட மிகவும் முக்கியமானவையாக இருக்கின்றன. குறித்த வலியைத் தொடர்ந்து தாங்கமுடியாது அல்லது நிச்சயமற்ற வாழ்வைத் தொடரமுடியாது என்பதின் அடிப்படையில் எழும் நம்பிக்கையின்மை, கையலாகதன்மை மற்றும் விரக்தி போன்ற தீவிரமான உணர்வுகளால் தற்கொலைதான் தீர்வென முடிவெடுப்பவர்கள் ஆட்கொள்ளப்படுகிறார்கள். வேறு சிலருக்கு சில வகையான மனநோய்களின் தாக்கம் தற்கொலை செய்வதற்கான தூண்டல்களைக் கொடுக்கக்கூடும். அப்படியான தூண்டல்களை குரல்களாக அவர்கள் கேட்கக்கூடும், அல்லது விம்பங்களாகப் பார்க்கக்கூடும்.

இனியும் என்னாலை இதுகளைத் தாங்கேலாது, எதுவும் எனக்கு இனி முக்கியமில்லை, செத்துப்போனால் நல்லது, நான் செத்தாலும் ஒருத்தரும் கவலைப்படப்போறதில்லை',போன்ற வலுவான வாய்மொழிகள் பெரும்பாலும் தற்கொலைகளுக்கான அறிகுறிகளாகக் காணப்படுகின்றன. இத்தகைய கருத்துக்களை நாங்கள் எப்போதும் சீரியசாக எடுத்துக் கொள்ளவேண்டும். நோய், மனச்சோர்வு, தோல்வி, நிராகரிப்பு, அடாவடித்தனம் போன்ற வலி அல்லது துன்பத்திலிருந்து விடுபடுவதற்காக ஒரு வழியைக் கண்டுபிடிப்பதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள் என்பதை நாங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். சில வேளைகளில் பழிவாங்குவதற்காகவும் தற்கொலையைச் சிலர் தெரிந்தெடுக்கிறார்கள்.

அத்துடன், சூழவிருப்பவர்களில் அவர்களுக்கு நம்பிக்கையற்றுப் போய்விடுவதால், தாங்கள் நிராகரிக்கப்பட்டிருப்பதாக அவர்கள் உணர்வதால், குடும்பத்தவர்கள் மற்றும் நண்பர்களிடமிருந்து அவர்கள் விலகியிருக்க விரும்புவார்கள், பொதுவில் அனைத்து விடயங்களிலும் கவனமாக இருக்கும் ஒருவரிடம் பொறுப்பற்ற தன்மை போன்ற இயல்புக்கு மாறான ஒரு நடத்தை காணப்படலாம். வழக்கமான செயல்பாடுகளில் அவர்களின் ஆர்வம் குறைந்திருக்கலாம். நித்திரை குறைவடைதல், பசி குறைதல் போன்ற பிரச்சினைகள் அல்லது மதுபானம் மற்றும் போதைப் பொருள்களின் பயன்பாடு அதிகரிக்கலாம். அவர்கள் அதிகளவில் எரிச்சல் அடையலாம். மேலும் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு மதிப்புமிக்க உடைமைகளை அவர்கள் வழங்கக்கூடும்.

தற்கொலை ஒன்றை எச்சரிக்கும் இப்படியான அறிகுறிகளில் கவனம் செலுத்துவதன் மூலமும், அது பற்றிக் குறித்த நபருடன் வெளிப்படையாக நாங்கள் பேசுவதன் மூலமும் குறித்த மரணத்தை எங்களால் தடுக்கக்கூடியதாக இருக்கலாம். இவை மட்டும்தான், எச்சரிக்கை அறிகுறிகள் என்று சொல்லமுடியாது. வழமைக்கு விரோதமான செயற்பாடு எதுவாக இருந்தாலும் அது பற்றிய கவனிப்புத் தேவை.

குறித்த நபருடன் பேசுவதற்குப் பாதுகாப்பான ஒரு இடத்தைக் கண்டறிவதுடன், பேசுவதற்கு அவருக்குத் தேவைப்படும் நேரத்தை வழங்குதல் மிகவும் அவசியமாகும். மேலும் அவர் பற்றிய எங்களின் அக்கறை மற்றும் அவரது அந்தரங்கம் தொடர்பாக எங்களின் மரியாதை குறித்து அவருக்கு உறுதியளித்த பின்னர், சமீபத்திய நிகழ்வுகளைப் பற்றி அந்த நபரிடம் கேட்கலாம். நான் உன்னில் கரிசனை கொண்டுள்ளேன். சமீபத்தில் நான் உன்னிடம் சில வேறுபாடுகளைக் கவனித்திருக்கின்றேன், எனக் கூறல் குறித்த நபர் தனது உணர்வுகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு ஊக்குவிக்கும். அத்துடன் தற்கொலை செய்வதைக் கருதுகிறாரா என்று அவரை நேரடியாகவே கேட்கலாம். அப்படியான எண்ணம் இருப்பதை அவர் ஒப்புக் கொண்டால், எப்படி எங்கே அவர் வாழ்க்கையை முடிக்க விரும்புகிறார், அதற்கான திட்டம் வைத்திருக்கிறாரா? எனக் கேட்கலாம்.

ஒருபோதும், அவரது நிலைமை விளங்குகிறது என்றோ அல்லது இப்படியான பிரச்சினையை இன்னொருவர் எப்படிக் கடந்திருக்கிறார் என்றோ கூறக்கூடாது. அதேபோல, என்ன கதை கதைக்கிறாய், அது ஒரு முட்டாள்தனம், நல்லதை நினை, தன்னலமாக இருக்காதே, அப்படிச் செய்தால் குடும்பத்துக்கு வெட்கக் கேடு! என்றெல்லாம் அறிவுரை வழங்குவதற்கு நாங்கள் முயற்சித்தால் அல்லது அவரின் உணர்வை மட்டம் தட்டினால் அந்த நபர் எதனையும் எங்களுக்குச் சொல்ல விரும்பமாட்டார். குறித்த நபரின் உணர்வுகளை நாங்கள் அங்கீகரிப்பது முக்கியமானது. நாங்கள் செய்யக்கூடிய உதவி ஏதாவது இருக்கிறதா என்று அவரைக் கேட்கவேண்டும். உளவள ஆதரவு, நடைமுறை உதவி, ஆலோசனை அல்லது சிகிச்சையைப் [குடும்பம், நண்பர்கள், சமூக முகவர் நிலையங்கள், நெருக்கீட்டு மையங்கள், கவுன்சிலர்கள்] பெறக்கூடிய ஆதாரவளங்களைப் பற்றிப் பேசவேண்டும்.

23 ஆம் பக்கம் பார்க்க...






# தந்தையின் புரிதலும் கணவனின் புரிதலும்

றஜினா மகின்சன்
(ஜேர்மனி)

நம்மை இந்த உலகிற்கு கொண்டு வந்த அன்னை அறிமுகப்படுத்தும் முதல் கதாநாயகன் உன் அப்பாவே. எட்டி உதைத்த கால்களை கட்டி அணைத்து முத்தமிட்டு பூரித்து போவரும் அவரே.

திருமணத்துக்கு பின்னர் அப்பா என்பவரை மறந்து விடாதே! உன்னை ஏணியில் ஏற்றி விட்டவர் அவரே!

அப்பா என்கிற உறவு மகள் என்பவளுக்கு கடவுள் கொடுப்பது ஆகும். கணவன் என்பவரை மட்டுமே அவளாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வாள்.

கூடுதலான மகள்கள் அனைவரும் தந்தை செல்லமாகவே இருப்பவர்கள்!

என்ன நண்பர்கள் சரி தானே?! அப்பா என்பவரை விட வேறு யார் இவ்வுலகில் உன்னைக் கவனமாகப் பார்த்துக் கொள்வார்? உனக்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணிப்பவர் அல்லவா? கோபம் கொண்டு கதைத்தால், என் மகள் தானே என்னை திட்டுகிறாள் என்று தானே கூறுவார். ஆனால் கணவன் சில சமயங்களில் அப்படி நினைக்கமாட்டார். ஆனால் அவர் தந்தை ஆகிய பின் விட்டுக் கொடுத்து விடுவார்.

இப்பூமியில் பிறந்த பின்னர் அப்பா என்பவர் பாதுகாத்தும் அன்பு செலுத்தியும் வருவார். திருமணத்துக்கு பின்னர் கணவர் அப்பாவின் இடத்தில் இருப்பார். கணவன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இதனை எமக்கு உணர்த்திய வண்ணம் இருப்பார்.

கடையில் ஒரு பொருளை வாங்கி அதனை கையில் எடுத்து வந்தால், தந்தை மகளிடம் பிடுங்குவார். அப்பா பாரமில்லை என்று சொல்லிப் பாருங்கள். பதிலுக்கு காத்திருக்காமல் அது பிள்ளைக்குப்பாரம் என்று எடுத்து தான் நடப்பார். இதே குணம் கணவனுக்கும் இருப்பதை நீங்கள் அவதானித்து இருப்பீர்கள்.

கடைக்குப்போனால் என்ன வேலைக்குப்போனால் என்ன தந்தைக்கும் கணவனுக்கும் உறவுமுறை மாறினாலும் உணர்வுகள் ஒருமித்து இருப்பதை அவர்கள் செயல்கள் காட்டும்.

பெண்ணின் **first love** அப்பா. உன்னை முதல் முதலில் புரிந்து கொள்பவர் உன் தந்தை, அதன் பின் வருபவர் உன் கணவர். இரண்டு பேரிலும் யாரின் புரிதல் சிறப்பு என்று கூறமுடியாது.

நல்ல கணவனைப் புரிந்து கொண்ட பெண்ணுக்கு மட்டுமே தெரியும், கணவன் பேசும் போது உள்ள கோபத்தை விட, அவர் பேசாதபோதுது தன் மனைவி மீது கொண்ட பாசம் அதிகம் என்று..!

கணவனுக்கு மனைவி இரண்டாவது தாயாக இருக்கலாம்.. ஆனால் மனைவிக்கு அன்பு கணவன் எப்போதும் முதல் குழந்தைதான்.

ஒரு பெண்ணுக்கு பிறந்த வீடு வீடு ஞாபகம் வாரமல், ஒரு தந்தைபோல் அன்னை போல் தன் மனைவியை பார்க்கும் ஒரு கணவன் வரப்பெற்றால் ஒரு மனைவிக்கு அதனைவிட பெருவரம் ஏது.

திருமணம் அவளுக்கு சொர்க்கமாகும். அந்த சொர்க்கத்திற்கான வழிக்கு வழிகாட்டியாக அவர்களின் பெற்றோரும் இருப்பார்கள்.

திருமணத்துக்கு பின்னர் அப்பா அம்மா இவர்களை மறந்து விடாதே! உன் அறிவும் ஆற்றலும் அழகும் அவர்கள் தந்தது.



# குறி

## தானம்

அன்றும் கொடுத்தோம்
ஒரு கையைக் கட்டிவிட்டு
மறு கையால்
இன்றும் கொடுக்கிறோம்
ஒரு கையில்
கைத்தொலைபேசியை
கொடுத்துவிட்டு மறு
கையால்
தொழில்நுட்பம் வளர்கிறது
நாமும் வளர்கிறோமா?

## சுற்றம்

ஓடினேன்
முகம் காட்டாது
முகம் பார்க்காது
ஆனால் இன்று
நின்று நிதானித்து
என் வீட்டு வீதியில்
நடக்கும்போது
அறிமுகமில்லா
பல புது முகங்கள்!

## அநுபவம்

கோலம் போட்டேன்
கொஞ்சம் கோணல்
என்றார் அம்மா
அழித்துவிட்டு மீண்டும்
போட்டேன்
இம்முறை பரவாயில்லை
என்றார் அம்மா
எம் வாழ்க்கையும்
கோலமானால்
எவ்வளவு நல்லது என்றேன்
முற்றம் இன்றும்
வெறுமையாகவே
இருந்திருக்கும்
என்றார் அம்மா!

## கர்மா

ஒரு புத்தகம் அதில்
ஒரு பக்கம் அதில்
ஒரு செல்வந்தன்
என் நூறு தலைமுறையும்
உட்கார்ந்து உண்ணலாம்
என்றான் பெருமையுடன்
புத்தகத்தின் மறுபக்கம்
அதே செல்வந்தன்
வாடிய முகத்துடனும்
ஒட்டிய வயிறுடனும்
அன்னதான வரிசையில்!

## பெரிய மனசு

பொன்னம்மாக்கா
சொன்னா
பெரியவன் மரம் நடுறான்
சின்னவன் பூசை
செய்யிறான்
நடுவிலானோ
நாட்டையும் வீட்டையும்
சுத்தம் செய்யிறான்
நான் பிரமித்துப்போனேன்!

தமிழினி பாலசுந்தரி -
நியூஸ்லாந்து





அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# பச்சை குத்தினால் தோல் புற்றுநோய் ஏற்படும் என்கின்றார்களே உண்மையா?



பச்சை குத்தினால் புற்றுநோய் வரும் என்பதற்கான தெளிவான திடமான ஆதாரங்கள் எதுவும் இது வரை கண்டறியப் படவில்லை. ஆனால் வரக் கூடும் என்ற சில சந்தேகங்கள் பரவலாக உள்ளன.

பச்சை குத்துவதற்கு பயன்படுத்தப் படும் நிறக் கலவைகளில் பலவித மான இரசாயனங்கள் கலந்துள்ளன. நிக்கல், குறோமியம், மங்கனீஸ், கோபா லட், டைடேனியம் ஓட்சைட் போன்றவை முக்கியமானவை. (nickel, chromium, manganese, cobalt, or titanium dioxide). இவற்றில் பல நச்சுத்தன்மை வாய்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அந்த இரசாயனங்கள் பச்சை குத்தப்பட்ட இடத்தில் மட்டுப்பட்டு நிற்கா மல் அருகில் உள்ள சருமத்திற்கும் நிண நீர்த் தொகுதி ஊடாக நிணநீர்க் கட்டிக ளுக்கும் பரந்து சென்று அவற்றை சற்று வீக்கமடையச் செய்வதாக அண்மைய ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

இவை நச்சுத்தன்மை வாய்ந்தமை என் பதற்கு அப்பால் நிக்கலும் குரோமியமும் புற்றுநோய்த் தூண்டியாக இருப்பதாக அறியப்பட்டுள்ளது. எனவே பச்சை குத்து பவர்களுக்கு எதிர்காலத்தில் பாதகமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ள தாக சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஆனா லும் புற்றுநோய் ஏற்படுவதாக இதுவரை கண்டறியப்பட வில்லை.

பச்சை குத்தப்பட்டவர்கள் எந் தவித ஆபத்தும் இன்றி சாதார ணமாக இருப்பதால் அவை பாது காப்பானவை என்ற எண்ணம் சாதாரண மக்களிடம் இருக்




கிறது. ஆனால் புற்றுநோய் போன்ற பாதிப்புகள் ஏற்பட நீண்ட பல வருடங்கள் எடுக்கும் என்பதால் அவை பற்றி பெரும்பாலும் தெரியவரு வதில்லை.

பச்சை குத்துவது என்பது சருமத்தில் சில அடையாளங் களை அல்லது கோலங்களை அல்லது எழுத்துக்களை வர்ண கலவைகளால் பதிப்பதாகும். சிறிய ஊசிகள்களால் நுண் ணிய அளவு வண்ணக் கல வைகளை மீண்டும் மீண்டும் சருமத்தின் மேற்பகுதியில் குத்துவதால் அவை உள்ளே செல்கின்றன.

இவை நிரந்தரமான அடை யாளங்கள் என்பது குறிபிடப்பட வேண்டியதாகும். காலத்தால் அழியாதவை. எனவே அந்நியப் பொருளான அது உடலில் நிரந் தரமாகக் குடிகொள்ளப் போகி றது என்பது கவனத்தில் எடுக்க வேண்டிய விடயம். எந்த அந் நியப் பொருளானாலும் அதற்கு எதிராக உடல் எதிர்வினையாற் றக் கூடும்.

புற்றுநோய் வருமா இல்லையா என்ற பிரச்சனைக்கு அப்பால் வேறு பல பாதிப்புகள் ஏற்படு வதை மருத்துவர்களாகிய நாம் காண முடிகிறது.

ஒவ்வாமை சரும நோய்கள் மிக முக்கியமானவை. அந்த இடத்தில் சருமத்தில் அரிப்பு எடுப்பது, அழற்சி மற்றும் எக் ஸிமா போன்ற பாதிப்புகள் ஏற்ப டுகின்றன. சிலருக்கு உடனடி யாகவே அத்தகைய பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஆனால் வேறு சிலருக்கு பல ஆண்டுகளுக்குப் பின்னரே அவை தோன்றக் கூடும்.

பச்சை குத்திய உடங்களில் கிருமித் தொற்று ஏற்பட்டு புண்கள் தோன்றுவதை அதிகம் காண முடிகிறது. இதற்குக் காரணம் பச்சை குத்தும் பணியாளர்கள்; தமது கைகளை கழுவுதல் குத்துவதற்கு உபயோகிக்கும் ஊசிகளை கிருமி நீக்கம் செய்யாமை போன்ற சுகாதார நடைமு றைகளை சரியான முறையில் கடைப் பிடிக்காமையே ஆகும். சருமத்தில் கிரு மித் தொற்று மட்டுமின்றி பெரிய சீழ் கட்டிகள் வரை ஏற்படுவதுண்டு.

பச்சை குத்திய இடங்களில் தழும்புகள் தோன்றுவது மற்றுமொரு பிரச்சனை. அழகைத் தேடப் போய் அசிங்கத்தில் முடிவதாக இது அமையும். இது எல்லோ ருக்கும் ஏற்படுவதில்லை. உடலியல் ரீதி யாக சிலருக்கு இவை ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகம். இருந்தபோதும் ஆழமான பெரிய புண்கள் ஏற்பட்டால் எவருக்கும் தழும்புகள் தோன்றலாம். தழும்புகள் சுலபமாகக் குணப்படுத்த முடியாதவை என்பதால் அவை வராமல் தடுப்பதே உசிதமானது.

சிறிய காய்கள் முளைகள், சரும அழற்சி போன்றை உள்ள இடங்களில் பச்சை குத் துவது அறவே கூடாது. ஏனெனில் அவை பின்பு புற்றுநோயாக மாறக் கூடிய சாத்தி யம் உள்ளது. புச்சை குத்துவதில் உபயோ கிக்கும் நிறக் கலமிகள் அதற்கான சாத்தி யத்தை அதிகரிக்கும்.

இவ்வாறாக பல வித பாதிப்புகள் ஏற்படு வதால் பச்சை குத்துவதைத் தவிர்ப்பதே நல்லது.

**நன்றி: ஹாய் நலமா**






அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்




# பாவை இலக்கியம்

பாவை இலக்கியங்கள் பாவைப் பாடல்கள் எனவும் அழைக்கப் படுகின்றன. தற்போது எமக்குக் கிடைக்கும் முன்னோர்களின் பாவை இலக்கியங்களாக 8 ஆம் நூற்றாண்டில் ஆண்டாள் இயற்றிய திருப்பாவையும், 9 ஆம் நூற்றாண்டில் மாணிக்கவாசகர் இயற்றிய திருவெம்பாவையும் காணப்படுகின்றன. தற்போது செந்தமிழ்ப்பாவை, இருபாவை, தைப்பாவை, திருவருட்பாவை, சமணத் திருப்பாவை போன்ற பாவை இலக்கிய நூல்கள் கிடைத்திருக்கின்றன.

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் பெண்களின் பருவத்தை வகைப்படுத்துகின்றனர். அவையாவன 5 வயது தொடக்கம் 8 வயதான பெண்கள் பேதை எனவும், 9 வயது தொடக்கம் 10 வயது வரை பெதும்பை எனவும், 11 வயது தொடக்கம் 14 வயதுவரை மங்கை எனவும், 15 தொடக்கம் 18 வயது வரை மடந்தை எனவும், 19 வயது முதல் 24 வயது வரை அரிவை எனவும், 25 முதல் 29 வரை தெரிவை எனவும், 30 முதல் 36 வயது வரை பேரிளம்பெண் எனவும் அழைக்கப்பட்டனர். இங்கு பாவை எனப்படுவது எவ்வயதுப் பெண் எனப் பார்த்தால், பிங்கலந்தை நிகண்டு 5 முதல் 9 வயதுவரையான பெண்கள் பாவை எனப்படுகின்றனர் என எடுத்துக் காட்டுகின்றது. அக்காலத்தில் 12 வயதில் திருமணம் நடைபெறுவதனால், இப்பாவைப் பருவத்தில் பெண்கள் சிறந்த கணவரைப் பெறுவதற்காகப் பாவை நோன்பு நோற்று திருமணம் செய்வது வழக்கமாக இருந்தது. 5 தொடக்கம் 11 வயது வரையுள்ள பெண்கள் நோன்பு நோற்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். மார்கழி, தை ஆகிய இரண்டு மாதங்களிலும் இந்த நோன்பு நோற்றிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது. மார்கழி மாதத்தில் தொடங்கி தை மாதத்தில் முடிவதனால், மார்கழி நோன்பு என்றும் தைநீராடல் என்றும் அழைக்கப்படுகின்றது. தைநீராடலுக்குச் சான்றுகள் குறிஞ்சிக்கலி, நற்றிணை, ஐங்குநுறூறு, போன்ற சங்கப்பாடல்களில் காணப்படுகின்றன.

> ''வையெயிற் றவர்நாப்பண்
> வகையணிப் பொலிந்து நீ
> தையில் நீராடிய தவந்தலைப்
> படுவாயோ''

என குறிஞ்சிக்கலியிலே காணப்படுகின்றது.

> ''பொய்தல் மகளையாய்ப்
> பிறர்மனைப் பாடிநீ
> எய்திய பிறர்க்கீத்த பயம்பயக்
> கிற்பதோ
> சிறுமுத்தனைப் பேணிச்
> சிறுசோறு மடுத்துநீ
> நறுநுத லவரொடு நக்கதுநன்
> கியைவதோ''

தைநீராடிய தலைவியைப் பார்த்து என்னுடைய காதலை நீ ஏற்றுக் கொள்வதே நீ நோன்பு நோற்றதன் பயன் என்று தலைவன் கேட்கின்றான். திருமணமாகாத பெண்கள் சிறந்த கணவனைத் திருமணம் செய்ய பாவை நோன்பிருப்பார்கள். பாகவத புராணம் கோகுலத்திலுள்ள பெண்கள் கண்ணன் தமக்குக் கணவனாக வர வேண்டும் என்று யமுனையிலே நீராடி மார்கழிமாதம் நோன்பிருந்ததாகக் கூறுகின்றது. கபிலர் தன்னுடைய குறிஞ்சிக்கலியிலே பெண்கள் தமது சிறுவயதிலே பாவையை வைத்து பாவை நோன்பு நோற்றதைக் கூறுகின்றார். பெண் வீடுகளுக்குச் சென்று பிச்சை எடுத்து அதை சமைத்து பாவைக்கும் படைத்து தோழிகளுக்கும் கொடுப்பாள்.




இவ்வாறான பாவை நோன்பிருந்தமை பற்றிய இலக்கியங்களை தற்கால புலம்பெயர்வாழ்வில் உற்று நோக்கும் போது இரண்டு சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன. பாவை நோன்பு நோற்கும் பெண்கள் பிச்சை எடுப்பது போல், ஐரோப்பியநாட்டிலும் ஒரு வழக்கம் இருக்கின்றது. திருமணத்திற்கு ஆயத்தமான பெண்களும் ஆண்களும் தம்முடைய சிநேகிதர்களுடன் சென்று நான் திருமணம் செய்யப் போகின்றேன் என்று பிறரிடம் கூறிப் பிச்சை எடுப்பார்கள். அப்பணத்தை தனது திருமணச் செலவுக்குப் பயன்படுத்துவார்கள். ஆனால், சிலர் தம்முடைய நண்பர்களுடன் உணவருந்தி அந்த நாளைக் கழிப்பார்கள். இதனை Bachelor Party என்பார்கள். ஆண்கள் தம்முடைய ஆண் நண்பர்களுடனும், பெண்கள் தம்முடைய பெண் நண்பர்களுடனும் மகிழ்ந்து கொண்டாடுவார்கள். இதன் நோக்கம் திருமணத்தின்பின் தம்முடைய நட்பை இந்த அளவிற்கு நெருக்கமாகக் கொண்டாடுவதற்கு நேரமும் பொழுதுகளும் திருமணத்தின்பின் வரப் போவதில்லை. அதனால், திருமணத்தின் முன் தாம் தம்முடைய நன்றாகப் பழகிய நண்பர்களுடன் இணைந்து மகிழ்ச்சியாகக் கொண்டாடிக் கழிப்பது வழக்கமாக இருக்கின்றது. நாடுகள் வேறுபட்டாலும் பண்பாட்டிலே ஒற்றுமையைச் சில விடயங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது.

அக்கால திருமண வயது 12 ஆக இருந்த போது பாவையர் 5 முதல் 11 வரையில் பெண்கள் சிறந்த கணவன் கிடைக்க நோன்பு நோற்றனர். இக்காலத்திலே திருமண வயது 18 ஆக உயர்ந்துள்ளது. இக்காலத்திலே மார்கழி நோன்பு நோற்கப்பட்டாலும் சிறப்பாக பாற்குடம் எடுத்தல் பாவை நோன்பிற்கு இணையாக அமைகின்றது. ஒவ்வொரு அம்மன் கோயில்களின் திருவிழாக்களிலும் பெண்கள் பாற்குடம் எடுக்கும் விழாவாக பாவையர் நோன்பு மாறியுள்ளது. திருமணமாகாத பெண்கள் தமக்கு சிறந்த கணவன் கிடைக்க வேண்டும் என்று பாற்குடங்களைத் தலையிலே ஏந்திய வண்ணம் ஆலயத்தைச் சுற்றிவந்து அந்தப் பாலை அம்மனுக்கு அபிசேகம் செய்வார்கள். இந்நாளில் அப்பெண் விரதம் இருத்தல் வழக்கமாகும். இந்த வழக்கம் புலம்பெயர்ந்த மண்ணிலும் காணப்படுகின்றது.

பெண்கள் இவ்வாறு திருமணம் செய்வதற்கு சிறுவயது முதல் தம்மை ஆயத்தமாக்குகின்றனர். அவ்வாழ்க்கை நல்வாழ்க்கையாக அமைவது அவசியம்.






ஆனந்தராணி பாலேந்திரா (UK)

# ‘மழை’- 1976

இயற்கையாகவே எனக்குள் இருந்த நடிப்பாற்றலும் எனது முதலாவது நாடகம் தந்த மகிழ்வான அனுபவமும் என்னைத் தொடர்ந்து நடிக்க வைத்தது. எனக்கேற்பட்ட சங்கடங்களைப் பின்தள்ளி மேலும் சவால்களை எதிர் நோக்க ஆயத்தமானேன்.

அந்தக் காலத்தில் ஆடல் பாடல் போன்ற அரங்கக் கலைகளில் பெண்களின் பங்களிப்பை ஓரளவு ஏற்றுக் கொண்ட எமது சமூகம் மேடையில் ஆண்களோடு சேர்ந்து பெண்கள் நடிக்க வந்தபோது ஏளனமாகத்தான் பார்த்தது. 60கள் 70களில் தயாரிப்பாளர்கள் பெரும்பாலும் பெண் பாத்திரங்கள் இல்லாத நாடகங்களைத் தெரிவு செய்தார்கள். அல்லது ஆண்களே பெண் வேடமிட்டு நடித்தார்கள்.

இந்தப் பின்னணியில்தான் 1976 ஆம் ஆண்டு பேராசிரியர் இந்திரா பார்த்தசாரதி எழுதிய ‘மழை’ நாடகத்தில் நடிப்பதற்கு மீண்டும் பாலேந்திரா என்னை அணுகினார். இதுவே அவர் நெறியாள்கை செய்த முதலாவது பெரிய நாடகமாகும். இதில் ஓரேயொரு பெண் பாத்திரம்.

நாடகத்தை வாசித்தவுடன் இது இன்னும் சிக்கலான நாடகம் என்பது எனக்குப் புரிந்தது. நான் நடிக்கவிருக்கும் பாத்திரவார்ப்பு மட்டுமல்ல, நான் பேசவிருக்கும் சில வசனங்களும் சர்ச்சையைக் கிளப்பும் என்பதும் புரிந்தது. நாடகம் எனக்கு நன்றாகப் பிடித்திருந்தது. நான் வருவது வரட்டும் என்று துணிச்சலோடு நடிப்பதற்கு சரி என்று பாலேந்திராவிடம் கூறிவிட்டேன். எனது அப்பா, அம்மாவின் தொடர்ந்த ஆதரவு எனக்கு மேலும் தைரியத்தைத் தந்தது.

‘மழை’ நாடகத்தில் நான்கு பாத்திரங்கள். ஒரு அப்பா, மகன், மகள், குடும்ப வைத்தியர். மகள் நிர்மலாவாக நான் நடித்தேன். மகன் ரகுவாக பாலேந்திரா நடித்தார். குடும்ப வைத்தியர் ஜேம்ஸ் பாத்திரத்தில் சுகந்தன் நடித்தார். இவர் ஏற்கனவே என்னோடு ‘பிச்சை வேண்டாம்’ நாடகத்தில் முக்கிய பாத்திரத்தில் நடித்தவர். அப்பாவாக இர. சிறீனிவாசன் நடித்தார். இவர் தான் எனக்கு முன்னர் அறிமுகமில்லாத ஒருவர்.



‘மழை’ நாடகம் மனோதத்துவ ரீதியில் அமைந்த உளவியல் சார்ந்த நாடகம். மனைவியை இழந்த இளைப்பாறிய பேராசிரியரான அப்பா உடல் நலம் குன்றிய நிலையில் ஒரு ஒதுக்குப்புறமான கிராமம் ஒன்றில் தனது மகள் நிர்மலாவுடன் வசிக்கிறார். நிர்மலா திருமண வயதைத் தாண்டிய ஒருவர். அவருக்கு இளவயதில் ஒரு காதல் இருந்தது. ஆனால் அது கைகூடவில்லை. அதில் அப்பாவிற்கும் பங்கு இருந்தது.

அப்பா அவரைப் பார்த்துக் கொள்வதற்காகத்தான் தன்னை கூட வைத்திருந்து தனது ஆசாபாசங்களுக்குத் தடையாக இருக்கிறார் என்று நிர்மலா கருதுகிறார். அப்பாவில் பாசமும் வெறுப்பும் கலந்த உணர்வு நிர்மலாவுக்கு. மகன் ரகுவோ, புத்தகங்களோடு மட்டுமே வாழ்க்கையைக் கழித்த அப்பாவோடு ஒத்துப் போகாமல் இளவயதிலேயே வீட்டை விட்டுப் போய் விடுகிறார். இதன் நடுவில் பேராசிரியரைப் பார்க்க அடிக்கடி வீட்டிற்கு வந்து போகும் குடும்ப வைத்தியர் ஜேம்ஸ். இவர் திருமணம் செய்து விவகாரத்துப் பெற்ற ஒருவர். நிர்மலாவிற்கு இவர் மீது ஒரு ஈர்ப்பு.

அடாது மழை பெய்துகொண்டிருந்த ஒரு இரவில் நிர்மலாவுக்கும் அப்பாவுக்கும் காரசாரமான விவாதம். டொக்டர் ஜேம்ஸ்ம் அங்கு இருக்கிறார். அன்று இரவு அப்பா இருதய நோயால் இறந்து விடுகிறார். அப்பாவின் இறப்பிற்கு தான் தான் காரணம் என்கின்ற ஒரு குற்றவுணர்வில் அவதிப்படுகிறார் நிர்மலா. ஓயாமல் பெய்து கொண்டிருக்கும் மழை அவருக்கு அப்பாவை ஞாபகப்படுத்துகிறது.

வீட்டை விட்டுப்போன மகன் ரகு திரும்பி வருகிறார். தங்கை நிர்மலாவை தன்னோடு வரும்படி கேட்கிறார். நிர்மலா மறுத்துவிடுகிறார். இதற்கிடையில் நிர்மலா டொக்டர் ஜேம்ஸ் உடன் வாழ நினைத்ததும் நிறைவேறாமல் போய்விடுகிறது.

நடிப்பதற்கு மிகவும் சிக்கலான சவாலான ஒரு பாத்திரம் இந்த மகள் பாத்திரம். மன உளைச்சலுக்கு ஆளாகி ஒரு ஹிஸ்ரீரியா வந்ததுபோல் அவரது உணர்ச்சிகள் அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும். எரிச்சல், கோபம், அழுகை, தவிப்பு, பாசம் என பல்வேறுபட்ட உணர்வலைகள். எனக்கு அப்போது 20 வயது தான். பாலேந்திரா இந்தப் பாத்திரத்தின் தன்மையை எனக்கு நன்றாக விளங்கப்படுத்தினார். நான் அதை நன்கு உள்வாங்கி நடித்தேன் என்றுதான் சொல்ல வேண்டும்.

‘மழை’ நாடகம் முதல் முதலாக 27-10-1976 அன்று கொழும்பு லயனல் வென்ட் அரங்கில் மேடையேறியது. லயனல் வென்ட் அரங்கு சிறந்த ஒளியமைப்பு வசதிகள் கொண்ட ஒரு அரங்கம். இங்கு பல சிங்கள, ஆங்கில நாடகங்கள் மேடையேறிய காலம் அது.

‘மழை’ நாடகம், அரங்கு நிறைந்த ரசிகர்கள் மத்தியில் மேடையேறிக் கொண்டிருந்தது. நாடகத்தில் ஒரு கட்டத்தில் அப்பாவும் மேடையில் இருக்க, திருமணங்களைப் பற்றிய உரையாடலைத் தொடர்ந்து, நிர்மலா [நான்] டொக்டர் ஜேம்ஸிடம் ‘‘**I need a man**’’ எனக்கு ஒரு ஆம்பிளை வேணும். அது நீங்களாகக்கூட இருக்கலாம் என்று கூறுகிறாள். டொக்டர் ஜேம்ஸ் அதிர்ந்துபோய் நிற்கிறார். நான் இந்த வசனத்தைப் பேசியவுடன் சபையிலும் பலர் அதிர்ந்துதான் போனார்கள். முதலில் பெரும் நிசப்தம். ஊசி விழுந்தால் கேட்கும் அளவிற்கு நிசப்தம். பின்னர் சலசலப்பு. முதல் ஓரிரு வரிசைகளில் இருந்தவர்கள் சிலரின் ஆ. என்ற சத்தம் மேடையில் நின்ற எனக்குக் கேட்டது.

மிகுதி அடுத்த இதழில்...




அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# K.K.L.

4th ANNIVERSARY

Textilien Schmuck Haushaltsware

4 ஆம் ஆண்டு நிறைவையும்
தைப் பொங்கலையும் முன்னிட்டும்

one day Sale

09.01.2021 சனிக்கிழமை
ஒரு நாள் மட்டும்
அந்த நாளைத் தவறவிடாதீர்கள்

அனைத்து ஆடைகளும்
50 வீத மலிவு
விலையில்
சமையலுக்கு சிறந்த
வெள்ளிப் பாத்திரங்கள்
மற்றும் இமிரேஷன் நகைகள்
அனைத்தும் மலிவு
விலையில்



அனைவருக்கும்
நத்தார், புத்தாண்டு
வாழ்த்துக்கள்



Rheinische str.56 44137 Dormund
Tel: 0231 96 98 6610

https://m.facebook.com/ kkl.textillenschmuck

# நின்னைச் சரணடைந்தேன் 27



கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

புத்தர் குறிப்பிட்ட நிர்வாணத்தின் வெளிச்சத்தில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் கவிஞன் பாரதி. அமர நிலை எய்துவோம் என்று தாரணியில் வாழும் மக்களை அழைக்கும் வல்லமை கொண்டவன் எனில், எப்பேர்ப்பட்ட அமர வாழ்வை பாரதி சுகித்திருக்க வேண்டும்.

நிரம்பி வழியும் இன்பத்தில் வெற்றிடத்தை கண்டு மோன நிலை கண்டவர். கண்ணிமையிலும் நுண்ணிய காதலை, எண்ணி எண்ணி மேன்மை கொள்ள எக்காலத்துக்கும் உகந்த காதல் அகராதியை செதுக்கியவர்.

தன்னை இழக்கும் நிலை தான் காதல் என இலக்கணம் வகுக்கிறார். அதனால் ஒன்றொடல்ல பலவற்றோடு காதல் கொள்கிறார். இப்பிரபஞ்சத்தோடு தன்னை லயிக்கிறார். இந்த லயிப்பின் விழிம்பில் கண்ணனை எங்கணும் காண்பதுவும், பராசக்தியை யாதுமாகி உணர்வதும் என மாறி மாறி பரவசமடைகிறார்.

பாரதியின் சிருங்கார சொல்லோவியங்களில் என்னை பெரிதும் கவர்ந்த குயில் பாட்டில் இருந்து சில அடிகளை முன்வைக்கிறேன்.

**மன்னவனைக் கண்டவுடன்**
**மாமோகங் கொண்டுவிட்டாய்.**
**நின்னையவன் நோக்கினான்**
**நீயவனை நோக்கி நின்றாய்**
**அன்னதொரு நோக்கினிலே**
**ஆவி கலந்துவிட்டீர்,**

மொழிகளின் தேவையை முற்றிலும் துறந்த காதல், கண்களின் சந்திப்பு மொழியில் கலக்கின்றன. அங்கே தீண்டப்படுவது உயிர். உயிர் தீண்டுதல் என்பதை உண்மையாக உணர்வதற்கு அதீத ஆழ்ந்த அமைதி வேண்டும். அந்த அமைதியில் ஆத்மாவின் தன்மை உணரப்படும். அத்தன்மையோடு ஒன்றிடும் வண்ணம் அத்தருணம் அமைந்தால் அது பேரின்பப் போழ்து. அக்கணம் மட்டும் அல்ல அந்த இனிய இன்ப நினைவை மீட்டிப் பார்க்கும் போதெல்லாம் உயிர் தீண்டப்படும். உடல் தீண்டும் முன்பே ஆவியில் கலக்க வேண்டும் என்ற பேருண்மையை சுவைசேர்த்து சொல்கிறார்.

**ஆடவனாத் தோன்றி யதன்பயனை**
**இன்று பெற்றேன்**
**கண்டதுமே நின்மிசைநான்**
**காதல்கொண்டேன்**


ஒரு ஆடவனைக் கண்டு நாணம் ஏற்படும் போது பெண்மை உணரப்படுவது போல, கண்களினூடே ஊடுருவி ஒரு பெண்ணின் மனதை கவரும் போது, ஒரு பெண்ணை பார்த்து காதல் வயப்படும் போது இளைஞன் அன்று தான் தன்னை ஆடவனாக உணர்வான் என்பது நம் சங்கத் தமிழ் இலக்கியங்களில் ஊறிக்கிடக்கின்றன.

**நின்னையன்றி ஓர்பெண் நிலத்தி**
**லுண்டோ என்றனுக்கே**
**பொன்னே,ஒளிர்மணியே**
**புத்தமுதே,இன்பமே,**
**நீயே மனையாட்டி,நீயே அரசாணி,**
**நீயே துணைஎனக்கு,நீயே**
**குலதெய்வம்.**

ஆஹா , பெண்ணை போற்றி போற்றி கொண்டாடும் அழகியல் வாழ்வியலை ஆணித்தரமாய் அறிமுகப்படுத்தியவர் பாரதி. கண்கள் மட்டும் தான் உயிர் தீண்டியதா ? மேலுள்ள ஒவ்வொரு சொல்லிலும் வாசகர் உயிர் தீண்டப்படுகிறது.பாரதி தன் காதலியை குலதெய்வமாக பெரும்பாலான கவிதைகளில் போற்றுகின்றான். ஏனையோரிலிருந்து பாரதி வேறு பட்டு நிற்பதற்கு இது ஒன்று போதாதா ?

**பூரிப்புக் கொண்டாய் புளகம் நீ**
**எய்திவிட்டாய்.**
**வாரிப் பெருந்திரை போல் வந்த**
**மகிழ்ச்சியிலே**
**நாணந் தவிர்த்தாய் நனவே**
**தவிர்ந்தவளாய்,**
**காணத் தெவிட்டாதோர்**
**இன்பக் கனவினிலே**
**சேர்ந்துவிட்டாய்,மன்னன்றன்**
**திண்டோளை நீயுவகை**
**ஆர்ந்து தழுவி அவனிதழில்**
**தேன்பருகச்**
**சிந்தை கொண்டாய்**
**வேந்தன்மகன்,தேனில் விழும்**
**வண்டினைப்போல்.**
**விந்தையுறு காந்தமிசை வீழும்**
**இரும்பினைப்போல்,**
**ஆவலுடன் நின் யறத்தழுவி,**
**ஆங்குனது**
**கோவை யிதழ்பருகிக்**
**கொண்டிருக்கும் வேளையிலே**

மனம் , வாக்கு, சித்தம், செயல் என எதிலுமே அன்பினைக் கைக்கொள்பவன் , காதலியை கையாழ்வதிலும் மெல்லியலிலைக் காட்டுவதில் உறுதி



பூண்டவர் . ஆவிகலப்பு கண்களினூடு நிகழ்ந்தது, அடுத்து யாக்கையின் வேட்கை இதழ் வழி நிரம்புகிறது.

சில சொல்லாடல்கள் பாரதிக்கே உரித்தானவை போல தோன்றும். உதாரணமாக கண்ணம்மா என்றால் பாரதியே நினைவிற்கு வரும். அது போல ஆரத்தழுவி என்றாலே பாரதியின் சுக வாசம் வீசும். அன்போடு நெஞ்சம் உய்ய உயிர் கலந்து அணைக்கும் அதி உன்னத உணர்வினை ஆரத்தழுவி என்னும் ஒற்றை வார்த்தைக்குள் அடக்கும் வண்மைகொண்டவர்.

ஆவிக் கலப்பின் அமுத சுகந்தனிலே
மேவியங்கு மூட யிருந்த விழிநான்கு
இச்செயலை அமுத சுகம் என்று குறிப்பிடுகிறார். அழிந்து போகும் ஓர் பொருளில் பேரின்பம் நிலவ வாய்ப்பில்லை. ஆக்கைக்குள் மட்டும் அடங்கிய இன்பத்தில் அமுத சுகம் காண இயலுமா? அழியாத ஆன்மாவோடு கலந்திடும் அன்பினைத் தான் அமுத சுகம் என்று கருதியிருக்க கூடும்.

**சாவிலே துன்பமில்லை**
**தையலே,இன்னமும் நாம்**
**பூமியிலே தோன்றிடுவம்,**
**பொன்னே,நினைக்கண்டு,**
**காமுறுவேன் நின்னைக்**
**கலந்தினிது வாழ்ந்திடுவேன்**
**இன்பமுறு புன்னகைதான்**
**நின்று முகத்தே நிலவுதர,**
**மாண்டனன் காண்.**

மலை போலத் துன்பம் வந்தாலும், இன்பத்தை மட்டுமே எப்போதும் நுகர்ந்து கொண்டிருந்த பாரதி , சாவிலும் துன்பம் இல்லை என்கிறார். குயில் பாட்டின் காட்சிப் படி அந்தக் காதலன் , காதலியின் தேனிதழை பருகி பருகி இவ்வுலகை மறந்த உன்மத்த நிலையில் இரு ஆவியும் ஒன்றென கலந்து கண் மூடி இருக்கும் போது, திடீரென்று கொலை செய்யப் படுகிறான். இந்த சந்தர்ப்பத்தில், கோபம், பயம், கவலை என எதிர் மறை உணர்வுகள் பலதும் வரலாம். இருப்பினும் நம் பாரதிக்கு இன்பமே நிலவுகிறது. அந்த காதல் களியிலேயே மரணிக்கிறான். அதனால் மரணிக்கும் அவன் முகமும் மதி போல் அழுகுடையாகிறது.

காதல் அன்பினில் கலந்து வாழ்ந்தால் உலகில் துன்பம் இல்லை என்ற பேருண்மையை புரிந்து கொள்ள வேண்டும் என்றே பல கவி வரைந்து, இன்பத்தின், அமைதியின், ஏகாந்தத்தின் பாதையைக் காட்டி அவ்வழி, பேரின்ப பெரு வாழ்வை வித்திட்ட காதலன் பாரதியியின் வேதாந்த வாழ்வினை நினைந்து மீண்டும் சரணடைகிறேன்.









அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

ஏலையா க.முருகதாசன்
(யேர்மனி)

பூனைக்கு மணி கட்டுவது யார் என்ற சொற்பதத்தை பரவலாக பலர் கேட்டிருக்கலாம்.ஊரிலிருந்து வந்து 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் இச் சொற்பதத்தை அறிந்தவர்களாகவும், அதன் உட்பொருளை அறிந்தவர்களாகவும் இருப்பார்கள்.புலம்பெயர் நாடுகளில் தமிழ்ச் சமூக மட்டத்தில் இச்சொல் ஆங்காங்கே பயன்படுத்தப்பட்டுத் தான் வருகின்றது.

இச்சொற்பதம் நேரடி எடுகோளாக பூனையையும் எலிகளையும் சார்ந்து நிற்கின்றது. நான் படிக்கிற காலத்தில் எனது பாடப்புத்தகத்தில் படிக்கும் கதையாகவே இது இருந்தது.

கதையின் சுருக்கம் இது தானொரு ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவன் வைத்திருந்த நெல் மூட்டைகள் உட்பட உணவுப் பொருட்களை, அவன் வீட்டிலிருந்து எலிகள் சாப்பிட்டும், சேதப்படுத்தியும் வந்தன. இதனால் கவலையடைந்த குடியானவன் எலிகளை கொன்றொழிக்க பூனையொன்றை வாங்கி வளர்த்தான்.பூனையும் எலிகளைப் பிடித்து உண்ணத் தொடங்கியது. தமது உறவினர்கள் பூனையால் கொன்றொழிப்பதைக் கண்ட எலிகள் ஒன்றுகூடி தம்மைப் பாதுகாத்துக் கொள்வது எப்படியென ஆலோசிக்கையில், சில எலிகள் பூனை எம்மை நோக்கி வருவதைக் கண்டறிய பூனைக்கு மணியைக் கட்டினால், பூனை வரும் போது அதன் கழுத்திலிருக்கும் மணி ஆடிச் சத்தம் வர அதைக் கேட்டு நாம் ஓடியொழியலாம் என முன்மொழிந்து ஆலோசனை வழங்க,மற்றைய எலிகளும் நல்ல ஆலோசனை என வழி மொழிந்தன.உடனேயே அப்படியானால் பூனைக்கு மணி கட்டுவது எந்த எலி என்ற கேள்வியை மாறி மாறி எலிகள் ஒருவரையொருவர் திருதிரு முளித்துக் கேட்டுக் கொண்டதுடன் நீ என்று ஒன்றையொன்று மாறிச் சொல்லியனவே தவிர நான் மணி கட்டுகிறேன் என்று எந்த எலியும் துணிந்து முன்வரவில்லை.அப்பொழுது பூனையின் மியாவ் மியாவ் சத்தம் கேட்க எல்லா எலிகளும் ஓடி மறைந்துவிடுகிறன. இப்பொழுது புலம்பெயர் தேசத்தில் மனிதர்களுக்கு யார் மணிகட்டுவது என்பதில் ஒருவரையொருவர் நீ செய்யன் நீ செய்யன் எனச் சாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

புலம்பெயர் தேசங்களில் தமிழர்களால் நடத்தப்படும் கலை, இலக்கிய,சமூக அமைப்புக்கள் பற்றி ஒருவரை ஒருவர் புறணி பேசியும் குற்றம் சாட்டி வருவதையும் காணக் கூடியதாகவிருக்கின்றது. இவைகளில் அதிகமானவை எவர் பொது நிலையிலிருந்து வழுவி தவறு செய்கிறார் என்றோ, எது பொதுநிலையிலிருந்து வழுவி தவறு செய்யப்படுகிறது என்பதையோ ஒருவர் மாறி ஒருவர் கதைத்துக் கொள்வதும், தொலைபேசி வாயிலாக அதை கதைத்துக் கொள்கிறார்களே தவிர பெரும்பாலும் தவறுகள் எங்கு ஏற்பட்டதோ அந்த இடத்தையோ அந்த நபரையோ நாடி தமது எண்ணங்களை அபிப்பிராயங்களை நேரடியாக வெளியிடுவதில்லை. காரணம் தாம் எல்லாருக்கும் நல்லபிள்ளையாக இருந்து கொண்டு மற்றவர்களைத் தூண்டிவிடுவதேயாகும்.




அதே வேளை குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களும் தம்மிடம் தவறு இருந்தும், அதை ஒப்புக் கொள்வதும், தவறுக்காக மனம் வருந்துவதையும் மன்னிப்புக் கேட்பதையும் கௌரவக் குறைச்சல் எனக் கருதி தாம் நியாயவாதிகள் போன்று தமது தவறுகளை மூடிமறைத்து தம்மிடம் எந்தத் தவறுமே இல்லையென்பது போல வாதிடுவதும்,குற்றச்சாட்டுகளை கொண்டு வந்தவரைப் பற்றி பலரோடு கதைத்து அவரை ஒதுக்கி வைக்க முனைவதும், ஒதுக்கி வைத்தலும் நடைபெறுகின்றது.

எனக்கு இதில் நிறைய அனுபவமுண்டு.என்னிடம் பலர் தொலைபேசி வாயிலாகவும் நேரிடையாகவும் அண்ணை அங்கை பிழை நடக்குது இங்கை பிழை நடக்குது, நீங்கள் எழுத்தாளர்தானே அதைக் கேட்க மாட்டியளா எனக் கேட்பார்கள்.அதற்கு நான் நான் ஏன் கேட்க வேணும் பாதிக்கப்பட்டவர் எவரோ, அவர்தான் பாதிப்புண்டாக்கியவரிடம் கேட்க வேண்டும் என்று சொல்லி விடுவேன்.அவர்கள் பூனைக்கு மணியை நான் கட்ட வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதே அவர்கள் குற்றச்சாட்டுக்கு உள்ளானவரை நேரிடையாகச் சந்திக்கும் போது நீங்கள் எங்கள் சமூகத்திற்காக எவ்வளவு உழைக்கிறீர்கள் எனப் புகழாரம் சூட்டி நடிப்பார்கள்.

ஒரு நாள் எனக்கு அறிமுகமான ஒருவர், புலம்பெயர் தேசத்தில் ஒரு திருமண வரண் தேடும் விளம்பரத்தில் சாதி விபரம் கேட்டு எழுதியதைச் சுட்டிக்காட்டி மிகக் கோபமாக அதை ஒருக்கா நீங்கள்தான் கேட்க வேண்டுமென்று என்னிடம் கேட்டார்.

நான் அவரிடம் சிரிப்புடன் கேட்டேன்,நீங்கள்தான் குற்றச்சாட்டை முன் வைக்கிறீர்கள் நீங்கள் அதைக் கேட்பதில் என்ன தயக்கம் என்றவுடன், இல்லை என்று அவர் இழுக்க, அந்த ஊடகத்தில் தொலைபேசி இலக்கம் இருக்கிறது, மின்னஞ்சல் முகவரி இருக்கின்றது, தபால் முகவரியும் இருக்கிறது ஏதாவது ஒன்றுடன் தொடர்பு கொண்டு உங்கள் கருத்தை முன் வைக்கலாந்தானே என்று சொல்லிய நான் உங்களுக்கு தலையிடி என்றால் நீங்கள்தான் மருந்து குடிக்க வேண்டும் என்றேன்.சிலர் எல்லாருக்கும் நல்ல பிள்ளையாக மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் விலாங்கு மீன் போலவும்,கழுவுகிற மீனில் நழுவுகிற மீனாகவும் நழுவித் தப்பித்து மற்றவர்களை மணிகட்டச் சொல்லும் துணிவற்றவர்களாக இருக்கிறார்கள்.

பிள்ளைகளோடு சம்பந்தப்பட்ட கலை,கல்வி நிறுவனங்கள் விடும் தவறுகளை பெற்றோராக அவர்களுக்கு சுட்டிக்காட்டத் தவறி தயங்கி, அடுத்தவர்களிடம் தமக்கேற்பட்ட பாதிப்பைச் சொல்லி மணிகட்டச் சொல்கிறார்கள். நீங்கள் கேட்கலாந்தானே என்று கேட்டால், கேட்கலாம் – கேட்டால் பிள்ளைகளை பழிவாங்கிவிடுவார்கள். இந்தப் பழிவாங்கலும் நேரிடையாக பழிவாங்கல் என்று தெரியாதவாறு அதில் ஒன்றை நியாயப்படுத்தி தம்மை அதிலிருந்து பாதுகாத்துக் கொள்கிறார்கள் என்கின்றனர்.அவர்கள் சொல்வதில் உண்மையில்லாமலும் இல்லை. தமது பிழையை உணர்ந்து ஒத்துக் கொள்ளாது, பெற்றோரிடம் தமக்கிருக்கும் அதிருப்தியை பிள்ளைகளிடத்தில் ஏதோ ஒரு வழியில் காட்டுவதும் இடம்பெறாமலில்லை.

எனவே பாதிக்கப்பட்டவர்கள் துணிவுடன் தாமே மணிகட்ட முன் வரவேண்டுமே தவிர மற்றவர்களைக் கொண்டு மணி கட்டுவதற்கு முயற்சிக்கக் கூடாது. இது கருத்தியல் ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் தவறேதான். அதே வேளை தவறை ஒப்புக் கொள்வதும் ஏற்றுக் கொள்வதும் தவறு விடுபவர்களின் பெரும்பண்பாகும். கழுவின மீனிலை நழுவின மீனாக நடப்பதோ மற்றவர்களைக் கொண்டு மணி கட்டச் சொல்வதோ தவறாகும்.

Nandy's Catering & Partyservice
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன். சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
www.Nandys.de
e.mail:info@nandys.de



# புத்தாண்டும், புதிய சவால்களும்

## நடுப்பக்கம்



சேவியர்
(தமிழ்நாடு)

ஒரு பத்தாண்டு சந்திக்க வேண்டிய சவால்களை இந்த ஒற்றை ஆண்டு நமக்குத் தந்து விட்டது. வாழ்க்கையில் நாம் சந்திக்காதவைகளை சந்திக்கவும், சிந்திக்காதவைகளை சிந்திக்கவும் வைத்து விட்டது இந்த ஆண்டு. உண்மையிலேயே ஒரு நாள் என்பது, இறைவனோ, இயற்கையோ நமக்குத் தருகின்ற வரப்பிரசாதம் என்பதை எல்லோரும் புரிந்து கொண்டது இந்த ஆண்டு தான்.

வழக்கமாக புத்தாண்டு வந்தாலே ஒரு குதூகலம் வரும். ஒரு புதிய ஆண்டுக்குள் நுழையும் சிலிர்ப்பு மனசுக்குள் சிறகடிக்கும். இந்த வருஷம் நான் கண்டிப்பா எக்சர்சைஸ் செய்வேன் என்றோ, இனிமே டெய்லி வாக்கிங் தவறவே தவறாது என்றோ, இந்த பாழாப்போன சிகரெட்டை இனிமே புடிக்க மாட்டேன் என்றோ புத்தாண்டு வாக்குறுதிகள் புறப்படும். அது நாலாவது நாளே காலாவதி ஆகிவிடும் என்பது வேறு விஷயம்.

இந்த ஆண்டு அப்படி ஒரு புத்தாண்டுதீர்மானம்இருக்குமா? இருந்தாலும் என்ன இருக்கும் ? அடிக்கடி கைக்கு சானிடைசர் போடுவேன் என்றா ? இனிமே மாஸ்க் இல்லாம ரிஸ்க் எடுக்க மாட்டேன் என்றா?சமூக இடைவெளியில்லாமல் மக்களிடையே நடக்க மாட்டேன் என்றா? ஒரே குழப்பமாக இருக்கிறது இல்லையா ? கொரோனா அந்த அளவுக்கு நம்மை குட்டிக் கரணம் அடிக்க வைத்திருக்கிறது, என்பது தான் அதன் காரணம்.

புத்தாண்டு நம்மை ஒரு சவால்களின் தேசத்துக்குத் தான் அழைக்கிறது. போர்க்காலத்தில் பதுங்கு குழிக்குள் ஒளிந்து கிடந்தவன் வெளியே வரும் போது இருக்கின்ற மனநிலை தான் புத்தாண்டில் நுழையும் போதும் நமக்கு இருக்கும். தன்னைச் சுற்றி எல்லாமே மாற்றமடைந்தும், சிதிலமடைந்தும், சின்னாபின்னமாகியும் கிடந்தால் என்ன தான் செய்ய முடியும் ? மீண்டும் அனைத்தையும் புதுப்பிக்கவேண்டும் எனும் உத்வேகத்தைத் தவிர எதைத் தான் சுமக்க முடியும் ?

இதோ பொருளாதாரம் தனது பற்களை இழந்து பொக்கை வாய் காட்டிச் சிரிக்கிறது. ஏற்கனவே சிறு தொழில் செய்பவர்களெல்லாம் தங்களுடைய வயிற்றுக்குப் பட்டினி போடத் தொடங்கி விட்டார்கள். அன்றாடம் காய்ச்சிகளெல்லாம், அவ்வப்போது காய்ச்சிகளாக மாறிவிட்டார்கள். பணக்கார வாசத்தின் பங்களாக்களைத் தவிர மற்ற இடங்களில் வசந்தத்தின் வெயில் படவே இல்லை. நாம் சந்திக்கப்போகும் முதல் சவால், நமது பொருளாதாரம் சார்ந்தது. இலக்கு என்பது, உயரங்களுக்குச் செல்வதல்ல, ஆழங்களில் புதைபடாமல் காத்துக் கொள்வது.

உறவுகளின் நெருக்கம் கட்டியெழுப்பப் பட வேண்டியது இன்னொரு சவால். மதில்களில் அடைக்கப்பட்ட ஆண்டு முடிவு பெறுகிறது. கதவுகளைத் திறந்து வைக்கும் காலம் வருகிறது. உறவுகளைக் கூட ஆறடி தள்ளி நிற்க வைத்த வைரசின் வைராக்கியம் எப்போது தணியுமோ ? புத்தாண்டு இந்த இடைவெளியை உடைக்கும் காலம். இதயத்தால் இணைந்தும், உடலளவில் பிரிந்தும் இருக்கின்ற உறவுகளை சந்திக்கும் காலம். எப்படி சாத்தியமாகும், எப்போது சாத்தியமாகும் எனும் கேள்விகளுடனே மலர்கிறது இந்த ஆண்டு.

கல்விகளின் களத்தில் தாயம் ஆடி மாணவர்களைத் தோற்கடித்திருக்கிறது இந்த பேரிடர் காலம். காற்றைப் போல சிறகுகள் கொண்ட மாணவர் சமூகத்தை டிஜிடல் திரைகளில் சிறைவைத்திருக்கிறது. அவர்கள் அந்த சன்னல்களை உடைத்து விட்டு மீண்டும் பள்ளிக்கூட முற்றங்களில் பறந்து திரியும் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். கல்வியின் ஆழம் குறைந்து போய், பள்ளி வாழ்வின் சுவாரஸ்யம் மறைந்து போய், ஆசிரியர்களின் அருகாமை அகன்று போயிருக்கும் இந்த காலம் எப்போது மறையும் ? கல்வியின் தாழ்வாரங்களில் எப்போது மாணவ பாதங்கள் ஓவியம் வரையும் ? கேள்விகளோடு புலர்கிறது புத்தாண்டு.

சந்திப்புகள், விழாக்கள், திருமணங்கள், விசேஷங்கள், திருவிழாக்கள் என கூட்டமாய்ச் சேர்ந்து கும்மியடிக்கும் அத்தனை சுவாரஸ்யங்களையும் அனுமர் வால் போலச் சுருட்டி அதன் மேல் அமர்ந்து கொண்டது கொரோனா. புதிய ஆண்டு இந்தச் சங்கிலியை உடைத்து ஒரு புதிய சூழலை உருவாக்குமா எனும் கனவும், எதிர்பார்ப்பும் எல்லோரிடமும் இருக்கிறது. அத்தகைய விழாக்களை நடத்துவதும், அத்தகைய விழாக்களில் கலந்து கொள்வதும் புத்தாண்டு நம் முன்னால் வைக்கப் போகும் சவால்களில் ஒன்று என்பதை மறுப்பதற்கில்லை.

உணவுப் பழக்கங்களில் உருவாகியிருக்கும் மாற்றம் இந்த ஆண்டின் ஒரு திருப்பம். நோய் எதிர்ப்புச் சக்திகளுக்கான உணவுகளைச் சாப்பிடவேண்டும், ஆரோக்கியமான உணவுகளைச் சாப்பிடவேண்டும், போன்றவையெல்லாம் மக்களுடைய முதன்மைப் பட்டியல்களில் வந்திருக்கின்றன. அந்த சிந்தனையின் நீட்சி அடுத்த ஆண்டில் இன்னும் அதிகமாய் பிரதிபலிக்கும். உணவுகளின் மீது கவனம் செலுத்தும் ஒரு புதிய கலாச்சாரம் உருவாகும். ஆரோக்கிய உணவுகளின் தேவையும், தேடலும் வரும் ஆண்டின் புது சவால்களில் ஒன்றாய் புன்னகைக்கும்.

ஹெல்த் கேர், அடுத்த ஆண்டு நிச்சயம் ஒரு முக்கிய இடத்தைப் பிடிக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த ஆண்டு உலகெங்கும் உள்ள மக்கள் ஒரு நல்ல மருத்துவக் காப்பீடின் அவசியத்தை உணர்ந்திருப்பார்கள். டுபாக்கூர் காப்பீடுகளின் சிக்கல்களையும் புரிந்து கொண்டிருப்பார்கள். ஒரு நல்ல மருத்துவக் காப்பீடு எவ்வளவு முக்கியமானது என்பதை இந்தக் காலகட்டம் நமக்கு உணர்த்தியிருக்கிறது. இனிமேல் அதை அரவணைத்துக் கொள்ள வேண்டும் எனும் சிந்தனை முதன்மைப் பட்டியலுக்குள் நுழைந்து விடும்.

பயணங்களும், பயணங்கள் சார்ந்தவையும் அடுத்த ஆண்டு மீண்டும் புத்தெழுச்சி பெற வேண்டும். இந்த ஆண்டு

17 ஆம் பக்கம் பார்க்க...



பயணங்களின் கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி படியிலேயே அமர வைத்தாயிற்று. அத்தியாவசியம் தவிர்த்து மற்ற பயணங்களெல்லாம் கைகழுவப்பட்டு விட்டன. அச்சத்தின் உச்சத்தில் பொழுதுபோக்குப் பயணங்கள் விடைபெற்று விட்டன. நின்று போன பயணங்களை மறுபடியும் துவங்குவதும், புதிய பயணங்களை மேற்கொள்வதும் வரும் ஆண்டின் சவால்களின் வரிசையில் இடம் பெறும் என்பதை மறுப்பதற்கில்லை.

இந்த ஆண்டின் காயங்கள், அடுத்த ஆண்டின் தீர்மானங்களாக மாறும் அதே வேளையில் சில விஷயங்களை நாம் மனதில் எழுத வேண்டும். வாழ்க்கை என்பது நம்மைச் சுற்றி அரண்களை எழுப்பி நம்மைக் காப்பது மட்டுமல்ல. நம்மைச் சுற்றியிருக்கும் மனிதர்களைப்




பற்றிய கரிசனையை எழுப்புவது. அவர்களுக்கும் கை கொடுப்பது. கொரோனா காலம் வறுமையை எத்தனையோ வீடுகளில் நிரப்பிவிட்டுச் சென்றிருக்கிறது. அத்தகைய மக்களுக்கு உதவுகின்ற கரிசனை நிச்சயம் வேண்டும். மனித நேயம் அடுத்த ஆண்டு நம்மிடமிருந்து பெருமழையாய் சொரியட்டும்.

ஆன்மிகத்தின் அடைபட்ட மதகுகளை இந்த ஆண்டு அகலத் திறந்திருக்கிறது என்று சொல்லலாம். பலர் ஆண்டவனைத் தேடவும், தனிமையில் தன்னை ஆராய்ந்து பார்க்கவும் இந்தக் காலம் துணை செய்திருக்கிறது. புத்தாண்டு தனது சிறகுகளை விரித்து நம்மை அழைக்கும் போது, இந்த ஆன்மிகம் கற்றுத் தந்த அன்பின் பாடங்கள் நம்மை ஆக்கிரமித்துக் கொள்ளட்டும். உன்னத வாழ்வின் உயரிய சிந்தனைகள் நம்மை அணி செய்யட்டும். அப்போது தான் மலரும் புத்தாண்டு, சுயநலச் சிறைகளை விடுத்து அன்பின் சிறகுகளை உடுத்தும்.

புத்தாண்டுகள் எப்போதுமே நம்பிக்கையின் காலங்கள். பழைய காலத்தின் வலிகளை மறந்துவிட்டு, புதிய இதயத்தோடு இந்த புது வருடத்தில் நுழைவோம். இழந்து போனவற்றின் கவலைகளை விட, இழக்காமல் இருப்பவற்றின் மகிழ்ச்சி நம்மை இயக்கட்டும். நட்டங்களின் துயரத்தை விட, உயிர்பிழைத்த உற்சாகத்தோடு பயணிப்போம். செல்வங்களின் குவியலில் சுருண்டு கிடப்பதில் மகிழ்ச்சி விளைவதில்லை என்பதைப் புரிந்து கொண்டமைக்காக மகிழ்வோம். சக மனித கரிசனையோடும், தோழமையோடும் புத்தாண்டில் நுழைவோம்.

புத்தாண்டு புதிய சவால்களோடு காத்திருக்கிறது ! அதனால் என்ன நாம் புதிய மனிதர்களாய் நுழைவோம் !!

# ஏழைத் தோழன் இயேசு

*கிறிஸ்மஸ் என்பது அலங்கார வளைவுகளா ? இல்லீங்க !*
*கிறிஸ்மஸ் என்பது வண்ண விளக்கு மரமா ? இல்லீங்க !!*
*கிறிஸ்மஸ் என்பது தொலைக்காட்சி சிறப்பு நிகழ்ச்சிகளா ? இல்லீங்க !!!*
*கிறிஸ்மஸ் என்பது புத்தாடையும் பிரியாணியுமா ? சத்தியமா இல்லீங்க !!!*



இவற்றுக்கும் கிறிஸ்மசுக்கும் சம்பந்தமே இல்லீங்க. இன்னும் சொல்லப் போனால் ஆலயத்தில் போய் பாட்டுப் பாடுவதற்கும் கிறிஸ்மஸுக்கும் கூட சம்பந்தம் இல்லை.

பின் எது தான் கிறிஸ்மஸ் ? எதைத் தான் சொல்கிறது கிறிஸ்மஸ் ? கிறிஸ்மஸ் சொல்கின்ற அர்த்தத்தை ஒற்றை வார்த்தையில் சொல்லி விடலாம், அது தான் அன்பு. !

கிறிஸ்மஸ், புறக்கணிக்கப்பட்ட மக்கள் மேல் கொண்ட அதீத அன்பின் அடையாளம். நிராகரிக்கப்பட்டவர்களின் மேல் தெளிக்கப்பட்ட நேசத்தின் அடையாளம். ஏழை எளிய மக்கள் மேல் கொண்ட பேரன்பின் பிரவாகம், இது தான் கிறிஸ்மஸ்.

அந்த அன்பை நாம் அணிந்து கொள்ளும்போதும், அந்த அன்பை நாம் அறிந்து கொள்ளும் போதும், அந்த அன்பை நாம் பகிர்ந்து கொள்ளும் போதும் தான் கிறிஸ்மஸ் அர்த்தம் பெறுகிறது. ஏன் கிறிஸ்மஸ் என்பதை அன்பு என்கிறோம் ?



இயேசுவின் பிறப்பு, மானுடத்தின் மேல் அவர் கொண்ட அன்பின் வெளிப்பாடு. இயேசுவின் வருகைக்குத் தன்னைக் கையளித்த அன்னை மரியின் தாழ்மை, அன்பின் வெளிப்பாடு. தூய ஆவியால் கருவுற்ற மனைவியின் தாய்மைக்கு பெயரளவில் தந்தையான யோசேப்புவின் இதயம், அன்பின் வெளிப்பாடு. இயேசுவின் பிறப்பு எல்லா எல்லைகளிலும் அன்பை மட்டுமே நிறுத்தி வைத்திருக்கிறது.

இயேசு பிறந்தது மாளிகையின் மஞ்சத்திலல்ல, தொழுவத்தின் முன்னணையில். இயேசு தன்னை அடையாளப் படுத்திக் கொண்டது அரசவையின் வாரிசாக அல்ல, ஏழைகளின் தோழனாக. இயேசுவின் பிறப்பைக் காண வந்தவர்கள் மந்திரிகளல்ல, ஆட்டிடையர்கள். இயேசு தன்னை தொழிலாளர்களோடு அடையாளப்படுத்திக் கொள்கிறார். இயேசுவுக்கு பரிசுகளை அளித்தவர்கள் தன் இன மக்களல்ல, கீழ்த்திசை ஞானிகள். பிற இன மக்களோடு இயேசு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார்.

அன்பின் வெளியிலும், ஏழைகளின் வழியிலும் இயேசு தென்பட்டார். அதைத் தான் கிறிஸ்மஸ் போதிக்கிறது. வளர்ந்த இயேசுவும் அன்பை மட்டுமே முன்னிலைப்படுத்தினார். அன்பின்றி விண்ணகம் இல்லை என்றார். நிராகரிக்கப்பட்ட அயலானுக்கு உதவி செய்வதே உன்னத பணி என்றார். ஆலயம் செல்வதை விட அயலானைக் கவனி என்றார். ஏழைக்கு இரக்கம் காட்டாவிடில் உனக்கு விண்ணகக் கதவு அடைக்கப்படும் என்றார். ஏழைகள் வீட்டில் விருந்துண்டார். ஏழைகளின் கூட்டத்தில் அமர்ந்திருந்தார். ஏழைகளின் வாழ்வுக்காய் போதித்தார். ஏழைகளின் சார்பாக வாதிட்டார்.

கிறிஸ்மஸ் கற்றுத் தரும் பாடம் ஒன்றே ஒன்று தான். ஏழைகளுக்கு இரக்கம் காட்டுங்கள். அவர்களுக்குக் கொடுங்கள். அலங்கார வளைவுகளிலல்ல, ஏழைகளின் வாசல்களில் நுழையுங்கள். நமக்கான புத்தாடை பிரியாணி அல்ல, புறக்கணிக்கப்பட்டோருக்கு அவற்றைப் பகிர்ந்தளியுங்கள். மரங்களில் அல்ல வெளிச்சத்தின் தேவை !, மனங்களில் கொளுத்துங்கள். கிறிஸ்மஸ் என்பது பொழுதுகளைப் போக்குவதிலல்ல, ஏழைகளுக்கு நல்ல பொழுதுகளை உருவாக்குவதில்.

கோவிட் கால கிறிஸ்மஸ், வெறும் கொண்டாட்டங்களில் மலராமல், கொடுத்தலில் மலரட்டும். அப்போது தான் கிறிஸ்மஸ் அர்த்தப்படும். கிறிஸ்து மனம் மகிழ்வார். அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துகள்.

**சேவியர்** (தமிழ்நாடு)





# பகிர்ந்து உண்பதே பண்பான வாழ்வு

## அற்றார் அழி பசி தீர வேண்டும்

**கரிணி (ஜேர்மனி)**

தானங்களில் பல வகைகள் உண்டு. அறிவியல் வளர்ச்சியின் உச்சத்தில் இன்று உடல் பாகங்கள் முதற்கொண்டு அவற்றின் மூலக்கூறான அணுக்கள் வரை தானம் செய்யப்படுகிறது. இருப்பினும் இலவசமாக தன்னிச்சையாகவே புறத்திலிருந்து பெறக்கூடிய காற்று, வெப்பம் போன்றவற்றை தவிர வாழ்விற்கு ஆதாரமாக விளங்குவது யாதென்றால் அது உணவுதான்.

மனம் நிறையும்படி எந்த ஒரு பொருளை தானம் செய்தாலும் அதனை ஏற்பவருக்கு மனநிறைவை தர முடியுமா என்றால் அது ஆணித்தரமாக கூற முடியாது. ஆனால் உணவு உபசரிப்பு அந்த நிறைவை தந்துவிடும். வயிறு நிறைய ஒருவர் உண்டபின் போதும் போதும் என்றே கூறுவார்.

இப்பேற்பட்ட வாழ்வின் ஆதாரமாகிய உணவை பகிர்ந்துண்டு வாழ்வதே சிறந்த வாழ்வு என பிரித்து கூறுவதை விட அதுவே இயல்பான வாழ்வு எனலாம். ஏனெனில் எங்கு இந்த நிலை காணப்படவில்லையோ அதுவே இயல்புக்கு மாறிய நிலை. பிற பிராணிகள் கூட உணவை பங்கு போட்டுக் கொள்ளும்போது அறிவில் மேம்பட்ட மனிதர் அதைவிட நற்பண்புகளுடன் திகழ வேண்டும்.

தொன்று தொட்டே அதிகாலையில் வாயிலில் போடும் அரிசிமா கோலத்தை அழகான வரிசையில் எறும்புகள் கொண்டு செல்லவும், வாழையிலையில் உண்ணத் தொடங்குமுன் ஒரு பிடியாவது எச்சிற்படாமல் வணங்கி எடுத்து ஓரமாக வைத்து விட்டு உண்டபின் அதனை பறவைகளுக்கு உண விடுவது முதற்கொண்டு இரவில் வெற்றுப் பானை வைக்கக் கூடாது என சிறிதளவாவது உணவை மிச்சம் வைத்து இரவில் பசியோடு யாரும் கதவு தட்டினால் காலநேரம் பார்க்காது உபசரிப்பது வரை மனித பண்பாக இருந்து வந்தது.

வீட்டின் புறத்தே திண்ணைகள், விசிறி போன்றவை இலவசமாக அமைக்கப்பட்ட வீடே இயல்பான நாகரிக வீடாக இருந்தது. மேலும் வாயிற் படியில் குடிநீர் மேடை,

மோர், நீராகாரம் என்பன எவருக்கும் சொந்தமாக இருக்கும். கூடவே எம்வீட்டில் உண்டது நன்கு சமிபாடடைய வேண்டுமே என வெற்றிலை பாக்கும் இருக்கும். அதன்பின் வந்தவருடைய வீட்டில் எல்லோரும் உண்டார்களா அல்லது யாரேனும் பசித்திருக்கிறார்களா என்ற கேள்வி உரிமையோடும், பரிவோடும் வினவப்படும்.

முகக் குறிப்பறிந்து தன்னிடமுள்ளதை பங்கிட்டு வாழ்ந்த பண்பு இதுவே மனித பண்பின் நாகரிகம்.

ஆலயங்கள் தோறும் தொடர் பண்டிகைகள் சில குறிப்பிட்ட மாதங்களில் வருகின்றன. அவை உடல், உள, ஆன்ம மேம்பாட்டில் அதிக பங்கு வகித்தாலும் அத்தோடு இணைந்து உணவு இட்டு உண்ணும் முறையும் அங்கு இன்றியமையாததாக உள்ளதனை காண முடியும். பெரும்பாலும் அவை கோடையின் வறட்சியால் பாதிப்பு ஏற்படும் பருவத்திலும், மாரி கால நீர் அதிகரிப்பு வெள்ளப் பெருக்கு கால உணவு தட்டுப்பாடு காலத்திலும் அமைந்திருக்கும். திருவெம்பாவை, திருப்பாவை போன்ற விழாக்களையும், கோடையில் அம்மன் ஆலயங்களில் கூழ் வார்த்தலும், அதனைத் தொடர்ந்து பல ஆலயங்களின் வருடாந்த மகோற்சவங்களும் குறிப்பிடத்தக்கன.

அற்றார் அழி பசி தீர்த்தல் என எல்லா மதங்களின் பண்டிகைகளும் பிறருக்கு உணவு பகிர்ந்தளிப்பதை அடிப்படையாக கொண்டன. நாம் உணவில் கை வைக்கும் தருணத்தில் எத்தனையோ உயிர்கள் உணவின்றி உயிரை விட்டுக்கொண்டிருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. உலகின் அடுத்த மூலையில் உள்ள ஒருவரை உபசரிக்க முடியாது போனாலும் அருகில் இயலாமையால் துன்புறுபவருக்கு உதவுவதே பயனுள்ள வாழ்வு.

இன்றைய வாழ்வியலில் தலைக்குமேல் மறைக்கப்பட்ட மதிற்சுவர், பக்கத்து வீட்டில் களவு போனதா, கொலை விழுந்ததா என்றே அறிய முடியாத தன்னை பற்றிய அடைபட்ட காற்றுப்புகாத இரகசிய வாழ்வு, யாருக்கும் என்றால் என்ன என தன்வீடு வரும்வரை பதற்றமற்ற சுயநலம். பசி தெரியாது தன் பிள்ளையை வளர்ப்பதால் பிறர் பசி உணர முடியாத நாகரிகம். உணவுற்பத்திக்கான நிலங்களில்



கட்டுமானங்கள் என சமூக அக்கறை அற்ற போக்கு பாரிய விபத்தில் நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை கொண்டு சென்று கொண்டிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும்.

வளர்ந்து வரும் சந்ததிகளுக்கு எல்லா தரப்பட்ட வாழ்வியலையும் காண்பித்து உணர்ந்து வாழ வழிவகை செய்ய வேண்டும். விரதம் என்பது கூட உடலுக்கு ஆரோக்கியத்தை தந்தாலும் பிறர் பசியை உணர வழிவகுக்கும். உலகம் இன்று எதிர்நோக்கியுள்ள மிகப்பெரும் பிரச்சனை உணவுத் தட்டுப்பாடு ஆகும். இதன் காரணமாகவே அதிக அறுவடையை விரும்பி மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். இது ஒட்டுமொத்த இயற்கையின் படைப்பில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி பக்கவிளைவுகளை உண்டாக்கி வருவதை கண்கூடாக காண முடிகிறது.

> ''பகுத்துண்டு பல்லுயிர்
> ஓம்புதல் நூலோர்
> தொகுத்தவற்றுள்
> எல்லாம் தலை.''
> **திருக்குறள்.**

கிடைத்தவற்றை எல்லாம் பகிர்ந்து கொடுத்து தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல் அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையாய அறமாகும்.



# பேர்முடா முக்கோண பகுதியின் மர்மம் என்ன?




Dr.நிரோஷன் தில்லைநாதன் (ஜேர்மனி)

வேற்றுலக உயிரியாக இருக்குமோ? பேய்களின் உலகமாக இருக்குமோ? இதனுள்ளே இன்னொரு உலகம் இருக்குமோ? மிகப்பெரிய அளவிலான உயிரினங்கள் உள்ளே இருக்குமோ? அல்லது வேறொரு உலகம் அல்லது பிரபஞ்சத்தின் பிற பகுதிக்குச் செல்வதற்கான குறுக்குப் பாதை இதன் வழியே இருக்குமோ? இப்படி எதுவுமே இல்லையென்றால் இதனுள் சென்ற படகு, கப்பல், விமானங்கள் அனைத்தும் எங்கே மாயமாக மறைந்தன? அடடா... இது என்னடா ஆரம்பத்திலேயே இப்படிக் கேள்விகளுடன் அடுக்கிக்கொண்டு போகின்றேனே, அப்படி எதைத் தான் சொல்கிறேன் என்று யோசிக்கின்றீர்களா? அது வேறொன்றும் இல்லை, பலருக்கு இன்று வரை புரியாத புதிராக இருந்து வரும் பெர்முடா முக்கோணத்தை பற்றித்தான் கூறுகின்றேன். அப்படி என்னதானப்பா இந்த பெர்முடா முக்கோணத்தில் இருக்கிறது?

பெர்முடா முக்கோணத்திற்குப் பின்னால் இருக்கும் மர்மம் என்ன? சரி, இந்தக் கேள்வியை அலசி ஆராய்வதற்கு முன்பு, முதலில் இந்த பெர்முடா முக்கோணம் எங்கே இருக்கிறது என்பதைப் பார்ப்போம். இது Florida, Bermuda மற்றும் Puerto Rico ஆகிய மூன்று பகுதிகளுக்கும் பொதுவாக அமைந்துள்ள கடல்பகுதியினைக் குறிக்கும். கடந்த சில நூற்றாண்டுகளாக இந்த கடல்பகுதியின் வழியே செல்லும் படகுகள், கப்பல்கள் காணாமல் போய்விட்டன. கடல்வழியே மட்டுமல்லாமல் வான் வழியாகச் செல்லும் விமானங்களும் காணாமல் போய்விட்டன. இதனால் இந்தப் பகுதிக்கு Devil's Triangle என்கிற இன்னொரு பெயரும் உண்டு.

இது குறித்த மர்மமான செய்திகள் எப்போது இருந்து ஆரம்பித்தன என்று தெரியுமா? ஊடசளைவழிடநச ஊழடரஅடிரள வாழ்ந்த காலத்திலே கிடைத்து விட்டது. கொலம்பஸ் 08.10.1492 கடற்புறமாகப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். பெர்முடா முக்கோணத்தின் அருகே சென்றபோது அவரின் திசைகாட்டி வித்தியாசமான திசைகளைக்




காட்டுவதை இவர் அவதானித்தார்.

அப்படி இந்த பெர்முடா முக்கோணத்தில் என்ன தான் மர்மம் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவே அமெரிக்கக் கடலோர காவல் படை 1970ம் ஆண்டில் பெர்முடா முக்கோணத்தை நோக்கிச் சென்றது. அவர்கள் அதில் அவதானித்தது என்னவென்றால் பெர்முடா முக்கோணத்தில் திசைகாட்டி சுமார் 20 டிகிரி கோண மாறுபாட்டுடன் தான் திசையைக் காட்டுகிறது. இந்த மாற்றத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு அதற்கேற்றவாறு சரியான திசையில் செல்லாமல் இருந்தால், பெரும் விபத்துகள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இவையெல்லாம் ஒருபுறம் இருக்க நவீனக் காலத்தில் நடந்த பல சம்பவங்கள் இந்த இடத்தின் மீதான ஆர்வத்தை மக்களுக்கு அதிகரித்தது. அவற்றில் 05.12.1945 அமெரிக்கக் கடற்படையின் ஐந்து இராணுவ விமானங்கள் காணாமல் போனது ஒன்றாகும். இதைத் தவிர்த்து 30.01.1948 மற்றும் 17.01.1949 பயணிகள் விமானங்களான Star Tiger மற்றும் Star Aerial விமானங்கள் இதே பகுதியில் காணாமல் போனவை. இதில் 135 பேர்கள் என்ன ஆனார்கள் என்கிற தடயமே தெரியாமல் போனது அதிர்ச்சிக்குரிய விஷயம் ஆகும்.

1955ம் ஆண்டில் வெளிவந்த The case for the UFO என்கிற புத்தகத்தின் மூலம் இந்த நிகழ்வுகளுக்கு ஏலியன்கள் அல்லது வேற்றுக்கிரக வாசிகள் ஏன் காரணமாக இருக்கக் கூடாது என்கிற கேள்வியைப் புத்தகத்தின் ஆசிரியர் M. K. Jessup மக்கள் மனதில் விதைத்தார். இதைத் தொடர்ந்து பலர் இது தொடர்பான தகவல்களைச் சேகரித்து புத்தகமாகவும், குறும்படங்களாகவும் வெளியிடத் தொடங்கினர். இதனால் 1970ம் ஆண்டிலிருந்து 1985ம் ஆண்டு காலகட்டங்களில் பெர்முடா முக்கோணம் பெரிய அளவில் பேசப்பட்டது. இவை பரபரப்பாகவும், சுவாரஸ்யமாகவும் அனைவராலும் பேசப்பட்டதால் பெர்முடா முக்கோணம் தொடர்பான பல கட்டுக்கதைகளும் வெளிவந்தன. அவைதான் இன்று பெரும்பாலானோரை வியக்க வைத்துள்ளன. ஆனால் பெர்முடா முக்கோணத்துக்குப் பின்னால் இருக்கும் மர்மத்திற்கு என்ன காரணமாக இருக்கும் என்பதற்குக் கடலோர காவல் படை தெளிவாக ஒரு விளக்கத்தைக் கூறியிருக்கிறது. அது என்னவென்றால் கப்பல்கள் மற்றும் விமானங்கள் இந்த பெர்முடா முக்கோணப் பகுதியில் காணாமல் போவதற்கு அந்தப் பகுதியின் சில விசேஷ பண்புகளே காரணமாக இருக்கின்றன. இந்தப் பகுதியிலுள்ள வளைகுடா நீரோட்டம் மிகவும் கொந்தளிப்புடன் உள்ளது. இதனால் அதனுள் விழும் பொருட்களை, தடையமே இல்லாமல் எளிதாக எதிர்பாராத இடத்திற்குக் கொண்டு செல்வதற்கான சக்தி இந்த இயற்கைக்கு உள்ளது.

இதைத் தவிர்த்து கரீபியன் மற்றும் அட்லாண்டிக் கடல்கள் உருவாக்கும் கற்பனையே பண்ண முடியாத புயற்காற்று மிக உயரமான அலைகளையும், பலம் வாய்ந்த சுழல்காற்றையும் உருவாக்கக்கூடியது. இதனால் தான் விமானிகளும், கடல் மாலுமிகளும் பெரும் பிரச்சனைக்குள் மாட்டு படுகின்றார்கள்.

சரி நண்பர்களே, பெர்முடா முக்கோணத்துக்குப் பின்னால் ஒரு பெரிய மர்மம் மட்டும் இல்லை, பல்வேறான கட்டுக்கதைகளும் கூட இருக்கின்றன. அதில் எது உண்மை எது சும்மா கற்பனையில் தோன்றிய கதை என்று கூடத் தெரியாது. இருந்தாலும் உங்களுக்கு இந்த பெர்முடா முக்கோணத்தின் மர்மமான கேள்விகளுக்கு ஒரு சில அறிவியல் விளக்கங்களைத் தந்திருக்கிறேன் என்று நம்புகிறேன். இனி நீங்கள் கூறுங்கள்? இன்று நான் உங்களுக்குக் கூறிய இந்த பெர்முடா முக்கோணத்தின் மர்மம் பற்றி நீங்கள் முன்பே அறிந்திருக்கின்றீர்களா? எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh




Jaffna Bazar
Jaffna Bazar
2020 ஆண்டுக்கான
புத்தம் புது டிசைன்களை
வாங்கி மகிழுங்கள்!
நத்தார்,
புதுவருட
வாழ்த்துக்கள்
உங்கள் இல்லத்திற்கு தேவையான
அனைத்து மளிகைப்பொருட்களும்
பசுமையான மரக்கறி மற்றும்
கடல் உணவு வகைகளும்
KADHIR
Laila
Basmati Rice
BASMATI RICE
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# Waking in the Brahma Muhurtham

Bavvatharani R
Nallur

Do you know what is happening in nature between 3:30 to 5:30a.m.? It‘s the “Creator‘s Time“. This time period is called “Brahma Muhurtham“.

Therefore, the first three hours of the morning, before sunrise and after sunrise are vital. According to ancient Hindu scripts people taught and believed that man must act or perform any actions according to the nature/sun. It can manage the chemistry of a human body and mind, It is the most recommended time for yoga and meditation. In Ayurveda, they divided this morning practice into 3 segments per hour. Brahma Muhurtham starts 1 hour 36 min before sunrise and ends 48min after sunrise. one Gadiya is equal to 24 mintues and 1 muhurtham is equal to 48 minutes.

It is a powerful and auspicious time which occurs every early morning to achieve supreme knowledge and eternal happiness. During this time, enormous vital life energy called Prana is present in the atmosphere. So when that happens, your body wakens up! It usually happens to everybody but they don‘t notice it. During the brahma muhurtham many changes take place. It doesn‘t matter for what reason you do right things. Even for wrong reasons if you do the right things. Right things will happen to you.



## First hour:

Begin your day two hours before sunrise. The first thing you do when you get up from bed is to thank God or can watch the palm and chant certain mantras. Then before you place your feet on the ground just put your hand on the earth and worship the mother earth. Thirdly, hydrate yourself by drink at-least two glasses of water by in taking small sips of water and then hold it inside the mouth for few seconds and swallow. Continue doing this till you finish those two glasses of water. This type of in taking water neutralizes the PH level in water. As naturally our body is more acidic in the morning this method will help to balance your PH level of body. Do pranayama practice which is a method contains 3000 years of references which transcend cultures and spiritual methods to controlling the vital life force. As prana is an energy that pulses via the body along a network of subtle body channel, if we do this we connect to prana and to the world around us. It is a simple and great solution for stress relief which helps you build strong mental and physical health.

## Second hour:

Do oil pulling. Put 1tbsp pure gingerly oil and swish it around in your mouth for 15–20 minutes, and do not swallow any. Spit the oil into a trash can once you‘re done without spitting it into the sink or toilet, as this it is toxic and clogging. Then rinse your mouth well by using normal water. After that have a light exercise and take a good shower. Use your regular soap on Mondays, Wednesdays, Fridays and have a gingerly oil bath on Saturday. You also can use natural like coconut milk, essential oils on other days. This also works as aroma therapy. Or have a simple bathe in water which is neither too hot nor too cold.

While you are done with all these things the sun is ready to rise, so go outside and feel the fresh air and let the sun rays touch your skin. IR-A rays will make your skin ready for the mid-day sun which is harmful for the skin. This will also help you to absorb some amount of vitamin D.

Most of the people in India do surya namaskar (worship Sun) which is a great form of yoga consists simple sequence of different asanas of which each asana is good for each part of your body like neck, wrists, back, stomach, knees, spine, thighs, intestines etc. It takes only 10minutes and is the best yoga practice you can have.

## Third hour:

It is the time to have a good breakfast. We can split it into two parts containing cereals, sprouts, soaked nuts, fresh fruits locally grown which reach markets, home soon which are less likely to be preserved. Have milk, tea or any power packed drink containing herbs/fruits which detoxify the body. Never ever overeat, leave some space in your stomach for easy digestion but have more for breakfast than lunch and dinner. For these three hours avoid using your electronic devices.

Although there are no strict rules for this routine that everyone should follow, pick up some habits from the above to go through the day with more energy. Morning routine will bring good vibes for your entire day and if you do this right routinely, you‘ll do life right.











நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
LAKSHMI IMPEX
LAKSHMI IMPEX
பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
சுவையான இலங்கைக் கருவாட்டுக்கு நாடுங்கள்
தேடி வந்தோரை நாடி வரவழைக்கும்
இலட்சுமி இம்பெக்ஸ்
நாளும் மகிழ்விக்கும்
விலையும் தரமும்...
இல்லத்திற்கு வேண்டிய அனைத்து மளிகைப் பொருட்களையும் தரமாகவும் மலிவாகவும் தருகின்றோம்.
DRIED KATTA
fishpoisson katta séché / getrockneter Katta-Fisch
Scomberoides lysan
கட்ட கருவாடு
பெயர் பெற்ற Narresh Brand தயாரிப்புக்கள் எம்மிடம் கிடைக்கும்
NARRESH
MYSORE DHALL
NARRESH
THE TASTIER CHOICE
VINOD
2 Tier STEAMER
EURO Style
இலங்கை ஆழ்கடலில் பிடிக்கப்பட்டு சிறந்த சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு ஐரோப்பிய தரசான்றிதழுடன் இறக்குமதி செய்யப்பட்ட தரமான கருவாடுகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
இதயம்
SESAMOL
LAKSHMI IMPEX Lütgendortmunder Str 67 44388 Dortmund Germany
Tel: 0049 157 3134 7867 | Email: Lakshmiimpexj@gmail.com


இங்கிலாந்தில் பெயர்பெற்ற ஸ்தாபனம்...
DSA
PURE EXOTIC FOODS
DSA Foods
Wholesale Suppliers of Superior Quality
NARRESH
THE TASTIER CHOICE
இல்லத்திற்கு வேண்டிய அனைத்து மளிகைப் பொருட்களையும் தரமாகத் தருகின்றோம்.
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
சுவையான இலங்கைக் கருவாட்டுக்கு நாடுங்கள்
இலங்கை ஆழ்கடலில் பிடிக்கப்பட்டு சிறந்த சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு ஐரோப்பிய தரசான்றிதழுடன் இறக்குமதி செய்யப்பட்ட தரமான கருவாடுகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
DSA
1Kg
DRIED KATTA
fishpoisson katta séché / getrockneter Katta-Fisch
Scomberoides lysan
கட்ட கருவாடு
MYSORE DHALL
VINOD
2 Tier STEAMER
Supplying you with highest Quality Products
DSA Foods Unit 11 Watermill Business Center Edison Road, Enfield, EN3 7XF UK
Tel: 0044-203-583-2116 |07889-424-055, 07342-742-069
arthik@dsafoods.com | www.dsafoods.com | www.narresh.co.uk



# திருமந்திரமும் வாழ்வியலும் 56

## பிரத்தியாகாரம்

சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி

மனதை அடக்கி உள்ளத்திற்குள்ளே இருக்கும் இறைவனை உணரும் பயிற்சியே பிரத்தியாகாரம்.

> இக்கருத்தை திருமூலநாயனார் திருமந்திரம் பாடல் எண் 578
>
> ‘‘கண்டுகண்டு உள்ளே கருத்துற வாங்கிடில்
> கொண்டுகொண்டு உள்ளே குணம்பல காணலாம்
> பண்டுஉகந்து எங்கும் பழமறை தேடியை
> இன்றுகண்டு இங்கே இருக்கலும் ஆமே.’’

மனமானது ஒரு நிலையில் இருப்பதில்லை. அலைந்து கொண்டிருக்கிறது. மரத்துக்கு மரம் தாவும் குரங்கைப் போல. வெளியே அலையும் மனத்தை உள்ளே உணர்வோடு பொருந்தி இருக்கச் செய்தால், பல நன்மைகள் உண்டாவதை அறிய இயலும். காலம் காலமாகக் காண விரும்பி, பழைமையான வேதங்கள் தேடியடைந்த பரம்பொருளை இங்கே இப்பொழுது, உங்களுக்கு உள்ளேயே இருப்பதைக் கண்டறிதல் கூடும். மனதை அடக்க உதவும் பிரத்தியாகாரப் பயிற்சியால் உள்ளத்துள்ளே இறைவன் இருப்பதை உணர இயலும் என்பது கருத்து.



> பெருமை மிகு பிரத்தியாகாரம் எனக்கூறும் திருமந்திரம் பாடல் எண் 585
>
> ‘‘ஒருக்கால் உபாபதியை ஒண்சோதி தன்னைப்
> பிரித்து உணர்வந்த உபாபதிப் பிரிவைக்
> கரைத்துஉணர்வு உள்ளல் கரைதல்உள் நோக்கல்
> பிரத்தியா காரப் பெருமைய தாமே’’

ஒளி வடிவான பரம்பொருளை அறிய ஒண்ணாது சீவன்களை மாயை தடுக்கிறது. இந்த மாயையைப் பிரித்து அறியச் சிவப் பரம்பொருளை நெஞ்சில் நினைத்து, உணர்வில் கலந்து, உள்ளம் உருக, மனத்துக்குள் எண்ணித் தியானித்தலே [உள் நோக்கலே] பிரத்தியாகாரப் பயிற்சியின் பெருமைக்குரிய பயனாகும்.

> மூலாதாரத்தில் மூண்டெழும் சோதி எனக் கூறும் திருமந்திரம் பாடல் எண் 580
>
> ‘‘மூலத்து இருவிரல் மேலுக்கு முன்நின்ற
> பாலித்த யோனிக்கு இருவிரல் கீழ்நின்ற
> கோலித்த குண்டலி உள்ளே செழுஞ்சுடர்
> ஞாலத்து நாபிக்கு நால்விரல் கீழதே’’

மூலாதாரத்திற்கு இரண்டு விரல் அளவு மேலே, முன் பக்கம் உள்ள குறி உறுப்புக்கு இரண்டு விரல் அளவு கீழே, வட்டமிட்டுக் குண்டலினியில் எழுகின்ற அழகிய சிவந்த சோதி ஒளியானது மண்ணுலகில் வாழும் மக்களுக்கு உந்திக் கமலத்திற்கு நான்கு விரல் அளவு கீழே இருக்கின்றது.

> ஓம் எனும் மந்திரம் உணர்த்தும் ஈசனை எனக் கூறும் திருமந்திரம் பாடல் 579
>
> ‘‘நாபிக்குக் கீழே பன்னிரண்டு அங்குலம்
> தாபிக்கும் மந்திரம் தன்னை அறிகிலர்
> தாபிக்கும் மந்திரம் தன்னை அறிந்தபின்
> கூவிக்கொண்டு ஈசன் குடிபுகுந் தானே’’

கொப்பூழ் [உந்திச் சுழி] இற்குக் கீழ் பன்னிரண்டு அங்குல தூரத்தில் உள்ள மூலாதாரத்தில் நிலை நிறுத்திச் சொல்லப்பட வேண்டிய மந்திர [ஓம்] மொழியைப் பலரும் அறியாதிருக்கின்றனர். இம்மந்திரத்தை அறிந்து கொண்டு விட்டால், குதி போட்டுக் கொண்டு இறைவன் ஓடி வந்து அங்கே [அப்படி நிலைநிறுத்துபவர் சிந்தையில்] குடி கொள்வான்.

---

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

முடிவில் அந்த நபருடன் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். அந்த ஒப்பந்தம் தற்கொலைக்கான தூண்டிகளை இனம் கண்டதும், அவற்றைக் கையாளும் உத்திகளை முயற்சிப்பதையும், அவர் நம்பக்கூடியவர்களை அல்லது ஆதாரவளங்களை அவர் அணுக வேண்டுமென்பதையும் வலியுறுத்துவதாக இருத்தல் வேண்டும். இவ்வகையில் பொறுப்புக் கூறல் என்ற எண்ணக்கரு ஒன்றை அவருக்குள் விதைத்துவிடல் ஒப்பந்தத்தைப் பேணவேண்டும் என்ற உணர்வை அவருக்குள் உருவாக்கலாம்.




அவர் தனியாக இல்லை. அவருக்காக நாங்கள் இருக்கிறோம். தற்கொலை செய்யவேண்டும் போல உணரும் தருணங்களில் அவர் எங்களுடன் பேசலாம் என்பதை நாங்கள் உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் அவர் எப்படியிருக்கிறார் என்பதை அறிவதற்கு நாங்கள் தொடர்ந்து தொடர்பில் இருக்கவேண்டும்.


உளவளத்துணை என்பது ஒருவருக்கு அவரை பற்றிய தெளிவை ஏற்படுத்தி அதற்கமைய அவர் எதிர் நோக்கும் பிரச்சினையை அவரே தீர்த்து கொள்வதற்கு வழங்கப் படும் உதவியாகும். அதனை எங்களால் முடிந்தவரை செய்வதற்கு முயற்சிப்போம்.








# i Phone 12 Pro Max இல் கலக்கும் LiDAR என்ற கரு ஒளிக் கமரா





ச.சிவவினோபன் (ஜேர்மனி)

LiDAR இதென்னடா புதுசா இருக்கே என்று நினைத்தால். கொஞ்சம் பொறுமையா நான் சொல்லுகின்ற இன்னொரு சொல் உங்களிற்குத் தெரியுமா என்று பாருங்கள்!

றேடார் (RaDAR) என்று கேள்விப் பட்டதுண்டா? கப்பல் றேடாறில் (RaDAR) மாட்டுப்பட்டது என்று சொல்லக் கேட்டிருப்போமே! அந்த றேடார் (RaDAR) உடைய இன்னொரு வடிவம் தான் இந்த LiDAR.

RaDAR என்பதன் விரிவாக்கம், Detection And Ranging. அதாவது ராடியோக் கதிர்களை ஒரு டோச் லைட் போல அடிக்க வேண்டும். அந்த ராடியோக் கதிர்கள் எதிரில் உள்ள பொருளில் பட்டுத் தெறித்துத் திரும்பி வரும். அவ்வாறு வரும் கதிர்களின் எண்னிக்கை மற்றும் நேரத்தை கணித்து எமக்கு எதிரில் உள்ள பொருள் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதைக் கணிக்கும் முறையே றேடார் (RaDAR) ஆகும்.

இங்கு LiDAR என்பதன் விரிவாக்கம், Light Detection And Ranging ஆகும். அதாவது ஒளிக்கதிர்களை டோச் அடிப்பதைப் போல அடித்தால் அந்தக் கதிர்களும் தெறிக்கும் அவ்வாறு தெறிக்கும் கதிர்களையும் நாம் கணிக்க முடியும் அதன் மூலம் இரவிலும் ஒரு பொருளின் தூரம் மற்றும் அதன் ஒளியின் நிறம் என்பவற்றை அதன் செறிவைப் பயன்படுத்திக் கணிக்க முடியும் என்று நான் இரண்டு வருடங்களிற்கு முன் வெற்றிமணியில் ஒரு கட்டுரையில் எழுதி இருந்தேன். அந்தக் கண்டு பிடிப்பின் பெயரைக் கூட கரு ஒளிக் கமெரா என்று பெயரிட்டிருந்தேன். அதுவே இந்த LiDAR தொழிநுட்பம் இப்போது 2020 இல் கைத்தொலைபேசியிலேயே தன் வித்தையைக் காட்டுகிறது.




## பல்கனியில்கூட பூசணிக்காய் காய்த்தது

சிவபிரியன்

யேர்மனியில் 6 மில்லியன் மக்கள் கலந்து கொள்ளும் உலகில் மிகப்பெரிய பீயர் திருவிழா Oktoberfest இம்முறை இடம்பெறவில்லை. ஆனால் பூசணிக்காய் கண்காட்சி லுட்விக்ஸ் பேக்கில் நடைபெற்றது.

யேர்மனியர்களுக்கு இந்த அக்டோபர்ஃபெஸ்ட்.தோட்டத்தில் விழைந்த தானியங்களை அறுவடைசெய்து அதற்கு நன்றிகாட்டும் விழாவாக இது அமையும்.

இம்முறை யேர்மனியில் மட்டுமல்ல உலகெங்கும் வீட்டுத்தோட்டம் பெருமளவில் வெற்றி அளித்தது. காரணம் Covid19 அதனால் ஏற்பட்ட லொக் டவுண்மும்தான் (Lockdown) என்றால் அது பொய்யாகாது. தாயகத்தைவிட புலம்பெயர் தேசத்தில் தமிழர்கள் மிகவும் ஆர்வத்துடன் வீட்டுத்தோட்டம் அமைத்தனர். பல்கனியில்கூட பூசணிக்காய் காய்த்தது. இது நாளையும் தொடரட்டும்.





# வேடுக்குநாறி மலையும் அண்மைய சர்ச்சைகளும்



## நம் நிலத்தின் தோன்மைக் கதைகளை மாற்றும் முயற்சியில் தோல்லியல் திணைக்களம்?

**கடந்த வெற்றிமணியின் தொடர்ச்சி...**

வவுனியா வடக்கின் நெடுங்கேணி நகரிலிருந்து சுமார் ஏழு கிலோமீற்றர்கள் தூரத்தில் அமைந்திருக்கின்ற எல்லைக்கிராமங்களில் ஒன்றுதான் ஒலுமடு. அக்கிராமத்தின் மையப்பகுதியிலிருந்து வண்டில் பாதை வழியாக சுமார் நான்கு கிலோமீற்றர்கள் வனப்பகுதிக்குள் பயணப்படுகின்ற போது இயற்கை அரணென நிமிர்ந்து நிற்கின்ற வெடுக்குநாறி மலைத் தொடர் பகுதியின் ஆரம்பப் பகுதியைக் காணலாம். வெடுக்குநாறி மலையும் அண்மைய சர்ச்சைகளும் கட்டுரையின் சென்ற மாதத்தொடர்சியாக இங்கே.

புராதன இலங்கையில் நீர்ப்பாசனத் தொழில் நுட்பத்தை ஆரம்பித்து செயற்படுத்தியவர்கள் நாகர்கள்தான் என்பது 'சிரான் தெரணியகல' உட்பட்ட வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாகும். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் நாகர்கள் வாழ்ந்ததற்கான எச்சங்கள் பரவியிருக்கின்றன. கிழக்கிலங்கையின் படுவான்கரையின் வெல்லாவெளியில் அமைந்திருக்கின்ற பிராமி சாசனங்களும் குடைவரை எச்சங்களும் இவற்றை பலப்படுத்துகின்றன.

இதேபோன்ற பிராமி எழுத்துக்களைக் கொண்ட சாசனம் இந்த வெடுக்கு நாறி மலையிலும் பதியப்பட்டுள்ளது. பிராமி எழுத்துக்களை முதன் முதலில் வட இந்தியாவில் அசோகச் சக்கரவர்த்தி பயன்படுத்தினார் என்றும் பிற்காலத்தில் பரப்பப்பட்டு பின்னர் திராவிட மொழிக் குடும்பத்தோடு கலந்த காரணத்தினால் தமிழில் தமிழ் வரிவடிவத்திற்கு ஏற்ப பிராமி எழுத்துக்களை உள்வாங்கி இங்குள்ள மக்கள் பயன் படுத்தினார்கள் என்பதும் மொழியியலாளர்களின் கருத்தாகும்.

ஆக நெடுங்கேணி ஒலுமடுவின் வெடுக்குநாறி மலைப் பிரதேசத்திலுள்ள இந்த பிராமி எழுந்துக்களோடு இணைந்த ஏனைய எச்சங்களும், நாக வழிபாடும், நீர்ப்பாசன அமைப்புக்களும் நாகர்களின் தொன்மத்தின் நீட்சி என்று கருதுவதற்கான வாய்ப்புக்கள் பல உள்ளன. இந்த மலைப்பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள நாகர் குளம் என்கின்ற குளப்பகுதி இதனை மேலும் வலுப்படுத்துகின்றது. வட கிழக்கில் பூர்வீர்கமாக வாழ்கின்ற தமிழர்கள் நாகர்களின் வழி வந்தவர்கள் என்கின்ற வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி இந்த வெடுக்குநாறி மலையின் கதைகள் உலகறியப்பட வேண்டியவை.

ஆனால் தொல்லியல் திணைக்களத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த ஆலயப் பகுதியில் பக்தர்கள் வழிபாடுகளை நடாத்துவதற்கும் இயல்பான நடமாட்டத்திற்கும் தடை விதிப்பதற்கான முயற்சிகளை மேற்க்கொள்வதும் இந்த நிலம் கொண்டிருக்கின்ற கதைகளை மாற்றுவதற்கான முயற்சிகளாகும். இங்கு கோயிலிற்கு சென்று வருவதற்கென அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு பகுதிக்கான படிகள் தவிர ஏனைய பகுதிகளுக்கான படிகளை அமைப்பதற்கு தொல்லியல் திணைக்களம் தடை வித்துள்ளது.

அதே நேரத்திலே இந்த ஆலயப்பகுதிக்குச் செல்வதற்கான சுமார் நான்கு கிலோமீற்றர்கள் தூரமுள்ள மண் பாதையில் உரிய முறையில் பாதைகளை அமைப்பதற்கு முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிதி குறித்தொதுக்கப்பட்டிருக்கின்ற நிலையில் வனவள பாதுகாப்புத் திணைக்களம் அதற்கான அனுமதியை தடுத்து நிறுத்தி வைத்திருக்கின்றது. குறித்த அனுமதியைப் பெறுவதற்காக பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சிகளை மேற்கொண்ட போதும் அனுமதி இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. இவற்றிற்கான விளக்கக் கடிதங்கள் முழுமையான சிங்கள மொழியில் ஆலய நிர்வாக சபைக்கு அனுப்பப் பட்டுள்ளது. தமிழும் சிங்களமும் ஆங்கிலமும் இந்த நாட்டின் அரச கரும மொழிகள் என்கின்ற நிலையில் மக்களுக்காக, மக்கள் புரிந்து கொள்ளக் கூடிய வகையிலேயே அரச திணைக்களங்கள் சேவையாற்ற வேண்டும்.

சர்மிலா வினோதினி திருநாவுக்கரசு (இலங்கை)

இந்த ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தை நடாத்தக்கூடாது என்று தொல்லியல் திணைக்களம் தனிச் சிங்களத்தில் கடிதத்தை அனுப்பி பொலிசார் தடுத்து, பின்னர் நீதி மன்ற அனுமதியில் பொங்கல் நிகழ்வுகள் இன்று ஆரம்பித்து பத்தாவதுநாள் நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கின்றார்கள் ஆலய நிர்வாகத்தினர். தொல்லியல் சின்னங்கள் முறையாகப்பராமரிக்கப் பட வேண்டிய அதே நேரத்திலே, வனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை, ஆனால் இலங்கையின் புராதன சின்னங்களில் ஒன்றாகிய சிகிரிய சிங்கமலையில் உரிய முறையில் படிகள் அமைக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகள் சென்று வர முடியும் எனில் வெடுக்குநாறி மலையில் படிகள் அமைத்து மக்கள் வழிபாடு செய்வதில் உள்ள தடைகள் என்ன?

பாதுகாக்கப்பட்ட உலக வனங்களில் ஒன்றாகிய சிங்கராஜ வனப்பகுதிக்கு மக்கள் செல்வதற்காக, காட்டின் மக்கள் நடமாட்டம் உள்ள முதலாவது வலயப் பகுதிவரை கற்பாதைகள் அமைத்து சென்றுவர முடியும் எனில் அதே போன்று வனத்தினை பாதிக்காத வகையில் கற்பாதைகளை அமைத்து பயணிகள் மற்றும் பக்தர்கள் உரிய முறையில் நடந்து சென்று வழிபாடுகளை நடாந்தி வருகின்ற வகையில் வெடுக்குநாறி மலைக்குச் செல்லும் பாதையில் உரிய கற் பாதைகளை அமைப்பதற்கேனும் வனவளத் திணைக்களம் அனுமதியை வழங்குவதில் உள்ள தடைகள் என்ன?

இந்த ஆலயத்தின் தொன்மத்தை அறிந்த வெளியிடத்து மக்கள் கிராமத்திற்குச் சென்று ஆலயத்தைத் தேடி வழிபடச் செல்கின்றபோது இனம் தெரியாதோரால் கேள்விகளுக்கு உள்ளாக்கப்படுவதன் பின்னுள்ள கதைகள்தான் என்ன? இவைதான் கிராம மக்களின் விடையற்ற வினாக்களாக உள்ளன.




# உயிரே உயிரோவியமாகின்றது



ஓவியக்கலை மனித இனத்தின் பிறப்புடன் ஆரம்பமான ஒரு கலை. இன்று ஆதிமனிதனின் குணாதிசயங்களை அறிய, அவன் பதிவுசெய்த ஓவியமே உதவுகின்றது. இன்று கணனி போல் அன்று உலகின் வரலாற்றை பதிவு செய்துவைத்த பெருமை இந்த ஓவியத்திற்கு உண்டு.

இன்று வரலாற்றுப்பதிவுகளை ஒளிப்படம் தனதாக்கிக் கொண்டு விட்டதால் ஓவியம் அப்பணியில் இருந்து சற்று மாறியுள்ளது. ஒரு கலைஞனின் ஓய்வும், ஒரு கலையின் ஓய்வும் மற்றொரு பாச்சலுக்கான பதுங்கலாகவே கொள்ளவேண்டும். கால ஓட்டத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ளாதவன் விரைவில் அழிந்துபோவான். அது மனிதனுக்கு மட்டுமல்ல கலைக்கும் பொருந்தும். சினிமாவாக இருக்கலாம். இசையாக இருக்கலாம். காலத்தை உள்வாங்கிய படியால் தான் இன்றும் நிலைத்து உள்ளது. பழமையை மறத்தலோ அழித்தலோ என்று பொருள் அல்ல. புதுமையை உள்வாங்கல் என்பதே உண்மை.

உயிரோவியம் என்று முன்னர் ஒரு ஓவியத்தைக் குறிப்பிட்டால், அந்த ஓவியம் மூச்சு விடும். எழுந்து நடக்கும். தனிமையில் எம்மோடு ஆயிரம் கதைபேசும். அத்தனை தத்துரூபமாக ஓவியம் இருக்கும். இன்றும் லியனோ டாவின்சி வரைந்த மோனலிசாவின் புன்னகையை அறிய ஆய்வுகள் ஆண்டுக்கணக்காக இடம்பெற்றுவருகின்றன. புன்னகையின் அர்த்தம் வருடம் ஒன்றுக்கு ஆயிரமாகிக்கொண்டே செல்கின்றது. எந்த மனோதத்துவ நிபுணராலும் ஒரு குறித்த அர்த்தத்தை சொல்ல முடியவில்லை. அன்று லியனோ டாவின்சி வரைந்த மோனலிசா Mona Lisa உயிர் ஓவியம். [1507 – 1517] இன்று ஓவியம் ஓவியம் தீட்டுகிற காலம் எனலாம்.





● மாதவி

அழியும் உடலில் அழியாத ஓவியங்களை அன்று தொட்டு இன்றுவரை தீட்டிவருகின்றனர். அந்த ஓவியம் வேறு. இப்போ நீங்கள் இங்கு படத்தில் காணும் ஓவியம் வேறு.



முன்பு ஓவியம் கலைஞனால் உயிரோவியமானது. இப்போ உயிர் ஒன்று ஓவியமாகிறது.

முன்பு ஓவியத்தை உயிர் பெறவைக்க வர்ணங்களையும், கோடுகளையும் பாவித்து அந்த வர்ணகளுக்கு இடையில் உயிரைச் சிறைப்பிடித்து வெளிக்காட்டுவார்கள். இன்று உயிருக்கு வர்ணம் அடித்து, கோடுகள் இட்டு உடம்பை ஓவியமாக்கி மகிழ்கின்றனர்.



படத்தில் ஒரு பெண் ஓர் ஆணின் மேல் அமர்ந்து, அந்த ஆணை ஓவியமாக்குவதில் தன்னை மறந்து ஈடுபடுவதைக் காணலாம். முன்பு ஓவியம் உயிர்பெற உழைத்த தூரிகை, இப்போ உயிர் ஓவியமாக உழைக்கின்றது.

காலத்தின் மாற்றம் உயிர் ஓவியமாகும் காலம் ஆகிவிட்டது. இந்த ஓவியத்தை நேரே பார்ப்பதைவிட அதனை ஒளிப்படம் எடுத்து அதனைப்பார்த்தால் அது அற்புதமான ஓவியமாகத் தெரியும். ஓவியரே ஓவியத்துடன் கைகொடுத்து படமும் எடுக்க முடியும். இவை [3-D] அதாவது முப்பரிமாண ஓவியங்களாக தீட்டப்படுகின்றது.

இப்போது அதாவது இக்காலத்தில் நீங்களே ஓவியமும், ஆகலாம்,சிற்பமும் ஆகலாம்.

காலத்தின் கோலத்தில் கலை தலைகீழாக மாறி நின்றாலும். அதனையும் இரசிக்க ஆயிரம் பேர் கூடாமல் இல்லை. நாம் கலைக்காக மாறுகிறோமோ இல்லையோ, ஆனால் கலை நமக்காக தன்னை மாற்றிக் கொண்டு மேலே மேலே செல்கின்றது. எனவே மனிதனுக்கு அழிவுண்டு.காலத்துக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ளும் கலைக்கு அழிவு இல்லை.




# விசித்திர மனநோய்!

## Munchausen Syndrome



### ஒரு யேர்மனியருக்கே இந்நோய் முதலில் அறியப்பட்டது!

இந்த வினோதமான நோயைப் பற்றிப் பேசுவதற்கு எனது பாடசாலை அனுபவம் ஒன்றை தொடர்புபடுத்துவது இந்நோயின் ஒரு பகுதியை இலகுவாக புரிந்து கொள்ள உதவும்.

‘‘எனக்கும் என் குழந்தைக்கு ஒரே வருத்தம், ஒரு மாதிரியாய் நெஞ்செல்லாம் அடைச்சுப் போய் நானும் அவளும் வீட்டில படுத்த படுக்கை தான்.’’ அந்தத் தாய் சொன்னதை மிகுந்த ஆதங்கத்தோடு நானும் கேட்டுக்கொண்டேன். நன்றாகப் படிக்கக் கூடிய குழந்தைக்கு இப்படியான நோய் வந்து சேர்ந்ததே என எனக்கும் கவலையும் யோசனையும் தான்.

குழந்தை பாடசாலையில் நன்றாக ஓடி விளையாடி, திடகாத்திரமாகவும் கற்பதை மிகுந்த சிரத்தையுடன் அவதானிப்பதையும் பார்த்த போது ஏதோ எங்கேயோ இடிப்பது போலிருந்தது. போதாக்குறைக்கு குழந்தையும் தனக்கெதுவும் உடல் வலி, மனக்கவலைகள் இருப்பது போலவும் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் தன்னுடைய தோழி ஒருத்திக்கு தனது தாய் பற்றிச் சொன்னது எதேச்சையாக என் காதிலும் கேட்டு நான் மேலும் ஜாக்கிரதையானேன்.

அம்மா எனக்கு அடிக்கடி மருந்து தாறா, ஆனால் எனக்கு மருந்து குடிக்க விருப்பமில்லை. ஆறு வயதேதான் என்றாலும் குழந்தை ஒரு வித கவனத்துடன் என்னைக் கண்டதும் தன் கதையை நிறுத்திக் கொண்டது.

ஆனால் அடுத்தடுத்த மாதங்களிலும் அடிக்கடி பாடசாலைக்குக் குழந்தை வராமல் இருப்பதும் அதற்கு தாய் ஒவ்வொரு நோய் நொடியென்று அளந்து விடுவதும் எனக்கேதோ ஒரு சந்தேகத்தைத் தர இதற்கென பதவியிலுள்ள அதிகாரியொருவருக்கு ஒருவருக்குத் தகவல் அனுப்பி விட்டு, அடுத்த சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தேன்.

அடுத்த தடவையும் ஒரு நோய் சொல்லப்பட்ட போது, அது நிச்சயமாக உண்மைக்குப் புறம்பாக இருக்கும் என்பது அவருடைய கதையைச் சுற்றி வந்த சம்பவங்கள் பறை சாற்றின. அதாவது குழந்தைக்கு வந்த நோயின் தீவிரத்தில் குழந்தையை மருத்துவ உலங்கு வானூர்தி மூலமாக ( Air lifted by the paramedics) வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதாக சம்பவத்தை அந்தத் தாய் விபரித்தார். இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த சம்பவத்தைப் பற்றி சொல்லி இதனால் தான் குழந்தை பாடசாலைக்கு வரவில்லை என்பது குறிப்பிடப்பட்டது.

தாய் போனபின், சில சாதாரணமான கேள்விகளுக்கு குழந்தை பதில் அளித்தது. குழந்தைகளிடம் ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை நேரடியாகக் கேள்வி கேட்கக் கூடாதென்பது (must not ask any leading questions) எமக்களிக்கப்பட்ட பயிற்சிகளில் ஒன்று.

எனினும் நன்றாகக் கதைக்கத் தெரிந்த, புத்திசாலியாகவும் இருக்கும் ஒரு குழந்தைக்கு தான் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட விடயம் தெரியாமல் இருக்கும் என்பதை என் மனம் ஒத்துக்கொள்ளவில்லை. அடித்து மட்டுமல்ல அவர்கள் வீட்டுக்கருகில் உலங்கு வானூர்தி இறங்கி ஏறும் வசதியெதுவும் இல்லை என்பது எமக்குத் தெரிந்திருந்தது. அயல் வீடுகளில் இருக்கும் எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும் சில ஆசிரியர்கள் அப்படி எதுவும் அந்த குறிப்பிட்ட நாளில் நடைபெறவில்லை என்பதையும் உறுதிப்படுத்தியிருந்தார்கள்.

ஏற்கனவே என்னால் பதிவு செய்யப்பட்ட குறிப்புகளிலிருந்தும் சமூகநல அதிகாரியின் நேரடிக் கண்காணிப்பிலிருந்து எடுக்கப்பட்ட குறிப்புகளிலிருந்தும் , அவருடைய கணவர் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் வாக்கு மூலங்களிலிருந்தும் அந்தத் தாய்க்கு ஒரு வித மன நோய் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த விசித்திர நோயால் பலர் பாதிக்கப்பட்டிருந்தாலும், முதன் முதலில் அதை மனநோய் வைத்தியர்கள் 18ம் நூற்றாண்டில் கண்டுபிடித்த போது முஞ்சோசன் (Baron Von Munchausen) என்கிற ஒரு ஜேர்மனியருக்கே இந்நோய் இருந்தது அறியப்பட்டதால் அவருடைய பெயரையே இந்நோய்க்கு வைத்து விட்டார்கள். இந்நோயின் அறிகுறிகள் பலதரப்பட்டதாயினும் முக்கியமானவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே பார்க்கலாம்.

இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தமக்கு இல்லாத பொல்லாத வருத்தங்களை எல்லாம் இருப்பதாக நம்புவார்கள். அதுமட்டுமல்ல தம்மைச் சுற்றி இருப்பவர்களையும் நம்ப வைப்பதற்காக படாதபாடு படுவார்கள்.

தம்மைத்தாமே காயப்படுத்துவது உட்பட தமது சிறுநீர் மாதிரியை மாசு படுத்துவது, மருத்துவ சொற்களைப் பற்றி முன்கூட்டியே படித்து வைத்து வைத்தியர்களையும் குழப்புவார்கள். அடிக்கடி தமக்கு மருத்துவ சோதனைகள், இரத்தப் பரிசோதனைகள் தேவை என அடம் பிடித்துக் கொள்வார்கள். அத்துடன் வேறு வேறு மருத்துவர்களை அல்லது வெவ்வேறு வைத்தியசாலைகள், மருத்துவ நிலையங்களை பயன்படுத்துவது போன்ற செயல்கள் மூலம் நோய் அறிகுறிகளை சரியான முறையில் பார்த்து நிவர்த்தி செய்ய வைத்தியர்களை அனுமதிக்க மாட்டார்கள்.

இந்நோய்க்கான சரியான காரணங்கள் அறியப்படா விட்டாலும் ஒரு சில காரணிகள் பலத்த பாதிப்புகளை ஏற்படுத்துவதாக அறியப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சியில் உயிரியல் மற்றும் உளவியல் காரணிகளின் பங்கு முக்கியத்துவம் வகிக்கிறது. குழந்தையாக இருந்தபோது துஷ்பிரயோகத்துக்கு ஆளாவது, மருத்துவமனையில் அடிக்கடி அனுமதிக்கப்பட்டிருப்பது, ஆளுமைக் கோளாறுகள் போன்றவை இவற்றுள் அடங்குகின்றன.

பொதுவாக இந்நோய் பெண்களை விட ஆண்களையே அதிகம் பாதிப்பதாய் இருப்பதும் கண்டு கொள்ளப்பட்டுள்ளது. சிகிச்சை முறைகளை எடுத்துக்கொண்டால் உளவியல் சிகிச்சைகள், முக்கியமாக பேச்சுச் சிகிச்சை ஒரு முக்கிய சிகிச்சையாகும். இதில் நோயாளியை கண்டுபிடிப்பது மிகக் கடினமாக இருப்பதற்குக் காரணம் நோயாளிகள் பெரும்பாலும் தமது உடல் நோய்க்கான குணம் குறிகளை மிகைப்படுத்தியும், ஒன்றுக்கொன்று முரணான அறிகுறிகளை அல்லது இல்லாத ஒரு நோயை வைத்தியர்கள் நம்பும் படியாகக் கூறுவதும் தான். தமக்கு மனதில் உள்ள பாதிப்புகளை வெளியே காட்டாமல் அதே வேளையில் தம்மைச் சுற்றியிருப்பவர்கள் தம்மை அனுதாபத்துடன் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் சிந்தனை உள்ளவர்களாக இருப்பதும் இவர்களுக்கு கைவந்த கலையாக இருப்பினும் இவர்கள் ஒருவகையில் அனுதாபத்துக்குரியவர்களே.

பூங்கோதை
(இங்கிலாந்து)



# கையெழுத்து - (01)


**★ மு.க.சுப்பிரமணியம் ★**

**சாதி சமய வேறுபாடின்றி மாணவர் நலன் கருதி வெளியிடப்படுவது.**
**வெற்றிமணி மாணவர் இதழ் 1969**
**மு.க.சுப்பிரமணியம்**
**தலைமையாசிரியர், 26.4.1969**

அன்புடையீர் வெற்றிமணிப் பிரதி அனுப்புகின்றேன், தங்கள் ஆதரவும், அபிப்பிராயமும் தேவை. முஸ்லீம் குழந்தைகளுக்கு ஏற்றவை எழுதியனுப்புக. சாதி சமய வேறுபாடின்றி மாணவர் நலன் கருதி வெளியிடப்படுவது.

**மு.க.சுப்பிரமணியம்**
**குரும்பசிட்டி தெல்லிப்பழை**

தாயகத்தில் வெளிவந்த முதலாவது மாணவர்சஞ்சிகை [1950] வெற்றிமணி. அதன் ஸ்தாபகர், ஆசிரியர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள். அன்று அவர் எழுதிய ஒரு குறும் கடிதத்தை 50 வருடங்களுக்கு மேலாகப் பாதுகாத்து இன்று கையெழுத்து என்ற தலைப்பில் முகப்புத்தகத்தில் பதிவேற்றியுள்ளார் திரு திக்குவல கமால் அவர்கள். தன்னை எழுத்தாளனாகச் செதுக்க உதவியவர்களை மறவாது நினைவூட்டிவரும் அவர் உள்ளம் பெரிது. முகப்புத்தகத்தில் 20.11.2020 வந்த தகவலை இங்கு உங்கள் பார்வைக்கு பிரசுரம் செய்கின்றோம்.



**கையெழுத்து - (01)**

**★மு.க.சுப்பிரமணியம் ★**


ஆசிரியராக,அதிபராக பல பாடசாலைகளில் சேவையாற்றிய படியே, முப்பது வருடங்களாக 'வெற்றிமணி' சிறுவர் சஞ்சிகையை நடாத்தியவர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள். வாசிக்கவும் எழுதவும் பகிரவும் அது எமக்கு உதவியது. அன்போடு அவர் எனக்கு எழுதிய சின்னஞ்சிறு கடிதம் இது Nagalingam Srisabesan-UK: வெற்றி மணி இப்போதும் யேர்மனியிலிருந்து மாதா மாதம் அவரது மகன் ஓவியர் மு.க.சு.சிவகுமாரனால் வெளியிடப்படுகிறது. இலங்கையிலும் கிடைக்கிறது.

பாவரசு பதியத்தளாவ பாறூக்: ஆரம்பகாலம் முதலே வெற்றிமணியோடு அங்கத்துவத் தொடர்பை அடியேன் வைத்திருந்தவன் கவிதை கட்டுரை உருவகக்கதை போன்ற பன்முக ஆக்கங்களில் அடையாளப் படுத்தியவர், கடிதங்களின் மூலமும் கண்டு கொண்டிருந்த மதிப்பிற்குரிய மு.க.சுப்ரமணியம் அவர்களை இதயத்தில் ஏற்றிப் பார்ப்பதில் மகிழ்வு.

Shanmugam Arulanantham: அன்றைய சிந்தாமணி வளர்த்த வர்களை ஒருபுரம் இருந்து உயர்த்தியவர் –சிறுவர் பாடல்களை வெற்றிமணி பிரசுரித்தது. எழுதத்தூண்டி பாடசாலைகளுக்கு சென்று ஊக்கம் ஊட்டியவர் நினைவூட்டிய கமாலுக்கு நன்றி.

Vathiri C Raveendran: பாடசாலைக் காலத்தில் வெற்றிமணி வாசித்துள்ளேன். Sehu Muhamed Thahir: அரைநூற்றாண்டுக்கு மேலாக அவர் எழுதிய கடிதத்தை பாதுகாத்துள்ளிர்கள் இதன்மூலமாக அவர்மேல் வைத்திருந்த மரியாதையை அறியக்கிடைத்தது. வாழ்த்துக்கள். Shafath Ahmed: நானும் வெற்றிமணியின் ஒரு ஆர்வலன்.

Kasi Jeevalingam Yarlpavanan:சிறப்பு Kalaiwathy Kaleel: அடியேனும் எழுதியுள்ளேன். வெற்றிமணி யேர்மனி: அன்புடன் திக்குவல கமால் அவர்களுக்கு தந்தையின் நினைவை மீட்டிய உங்கள் அன்பு கண்டு மகிழ்கிறேன் வெற்றி மணியை பத்திரிகையாக கடந்த 26 வருடங்கள் வெளியிடும் எனக்கு இருக்கும் மகிழ்ச்சியை, உங்கள் ஒரே கடிதம் தந்துவிட்டது. காரணம் மாணவர் இதழாக அன்று வெளிவந்த வெற்றிமணி சஞ்சிகை மீது நீங்கள்கொண்ட பெருமதிப்பு.






திக்குவல கமால்

---

## 'குட்டி சீனா'வாகும் அம்பாந்தோட்டை இந்தியாவின் பிரதிபலிப்பு என்ன?

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

தேசியவாத அமைப்புக்கள் கொடுத்த நெருக்குதல் என்பன இதற்குக் காரணம். இதனைச் செயற்படுத்த வேண்டும் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்குக் கடும் அழுத்தம் கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ கடந்த மாதம் இந்தியாவில் உயர்மட்டச் சந்திப்புகளில் ஈடுபட்டிருந்தபோதும், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனைய விவகாரம் கலந்துரையாடப்பட்டிருந்ததாக டில்லி உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன. அந்தப் பேச்சுகளை முடித்துக்கொண்டே கொழும்புக்கு வந்திருந்தார் பொம்பியோ.

கிழக்கு முனையத்தை எப்படியாவது எடுத்தவிட வேண்டும் என்பதில் இந்தியா அவசரமாக இருந்தமைக்கு காரணம் உள்ளது. சீனாவின் மண்டலமும் பாதையும் என்ற செயற்திட்டத்தின் வரைபடத்தில் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையம் இடம் பெற்றுள்ளது. ஏற்கனவே, கொழும்பு துறைமுக நகரத் திட்டத்துக்காக பெருமளவு காணியை எடுத்துள்ள சீனா, கிழக்கு முனையத்தையும் எடுத்துக்கொண்டால், கேந்திர ரீதியாக தமக்கு பாரிய நெருக்கடி ஏற்படும் என்பதைத் தெரிந்திருந்தது.

கிழக்குக் கொள்கலன் முனையத்தின் அபிவிருத்தி வேலைகளை 2019ஆம் ஆண்டு மே மாதம் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் செய்து முடிக்க வேண்டுமென இந்தியா அழுத்தம் கொடுத்தமைக்கு அதுதான் காரணம். 'சீனா இலங்கையை சூறையாடுகின்றது. கடன்பொறிக்குள் சிக்கவைத்துள்ளது' போன்ற பொம்பியோவின் கருத்துக்களும் இந்த விடயத்தில் எதனையாவது செய்ய வேண்டும் என்ற அழுத்தத்தை கோட்டாபய அரசாங்கத்துக்குக் கொடுத்திருந்தது.

இந்தப் பின்னணியில்தான் இரு வாரங்களுக்கு முன்னர் இடம் பெற்ற இணையவழி கருத்தரங்கு ஒன்றிலும், இந்த விடயம் குறித்துப் பேசப்பட்டுள்ளது. ஏசியன் இந்திய நிலையம், உலக விவகாரங்களுக்கான இந்தியக் கவுன்சில், பாத் ஃபைண்டர் உட்பட பல ஆய்வு நிறுவனங்கள் கூட்டாகச் சென்ற வியாழக்கிழமை இந்தக் கருத்தங்கை ஏற்பாடு செய்திருந்தன. இதில், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனைய அபிவிருத்தித் திட்டத்தின் அவசியம் தொடர்பாக இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே விரிவாக எடுத்து விளக்கியிருந்தார்.

இதனைக் கூட்டாக ஏற்பாடு செய்திருந்த அமைப்புக்களில் ஒன்று 'பாத் ஃபைண்டர்' என்ற அமைப்பு என்பது கவனிக்கத்தக்கது. புதுடில்லிக்கான இலங்கைத் தூதுவராகப் பிரேரிக்கப்பட்டிருக்கும் மிலிந்த மொரகொடைதான் இந்த அமைப்பின் நிர்வாக இயக்குனர். அவரது கருத்துக்களுக்கு அமைவாகவே இந்த அமைப்பும் செயற்பட்டுவருகின்றது. அமைச்சரவை அந்தஸ்த்தைக் கொண்ட தூதுவாக அவரது பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது. புதுடில்லி அவரை ஏற்றுக்கொள்வதற்குத் தயாரென பச்சைக் கொடி காட்டியிருக்கின்றது. இலங்கையில், உயர் பதவிகளுக்கானவர்களை நியமிப்பதற்கான குழுவின் முடிவுக்காக அவர் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த 'மெய்நிகர்' கருதரங்கு கூட, கொழும்பின் இராஜதந்திரிகள், கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் ஒரு அழுத்தத்தைக் கொடுப்பதற்கான முயற்சிதான்.

இந்தப் பின்னணியில்தான் இந்த கொள்கலன் துறையை அபிவிருந்தி செய்வதற்கான பொறுப்பை 'அதானி போட் என்ட் ஸ்பெசல் எக்கொனமிக் சோன்' [அதானி துறைமுக மற்றும் சிறப்பு பொருளாதார வலயம்] என்ற இந்திய நிறுவனத்திற்கு கிழக்கு முனையத்தில் 49மூ பங்குகளை விற்பனை செய்வதற்கு இலங்கை இணங்கியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அதனைவிட அதன் முழு நிர்வாகத்தையும் குறித்த நிறுவனத்திற்கு வழங்க இலங்கை அரசு இணங்கியுள்ளதாக சர்வதேச பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையின் 100 வீதமும் இலங்கை துறைமுக அதிகார சபையின் கீழ் செயற்படுத்தப்படும் என தேர்தலுக்கு முன் வாக்குறுதி அளித்த கோட்டாபய அரசாங்கம், தற்போது கொரோனா ஊரடங்கை சாதகமாக பயன்படுத்தி கிழக்கு முனையத்தின் முழு நிர்வாகத்தையும், 49 வீத பங்கையும் இந்திய நிறுவனத்திற்கு விற்பனை செய்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா குற்றம் சுமத்தியிருக்கின்றார். கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதாகச் சொல்லியிருக்கும் நிலையில்தான் அம்பாந்தோட்டையில் பாரிய முதலீட்டை சீனா செய்கின்றது. இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் சில செய்திகளை இலங்கை அரசாங்கம் கொடுத்தாலும், அது சீனாவின் பக்கம்தான் நிற்கின்றது என்பதற்கு அம்பாந்தோட்டை உடன்படிக்கையும் ஒரு உதாரணமாகவுள்ளது.






# இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர் வாழ்வும் படைப்பும்

## வெற்றிமைந்தன்

### உன்னால் முடியும் தம்பி

இதழில் கதை எழுதும் நேரமிது, என்ன சமையலோ, அக்கம் பக்கம் பாரடா, மானிட சேவை துரோகமா, புஞ்சை உண்டு, உன்னால் முடியும் தம்பி என பாடல்கள் அனைத்துமே இளையராஜாவின் டிரேட்மார்க் வசீகரங்கள்.புலமைப் பித்தன், முத்துலிங்கம் மற்றும் இளையராஜா பாடல்கள் எழுதியிருந்தனர்.

கமலஹாசன், ஜெமினி கணேசன், சீதா, மனோரமா, மீசை முருகேசன், சார்லி, ஜனகராஜ், நாசர், டெல்லி கணேஷ், ரமேஷ் அரவிந்த் என ஒரு நடிகர் பட்டாளமே படத்தில் நடித்தது.

உயர்ஜாதி என சொல்லப்படுகின்ற ஜெமினிகணேசனின் மகன் கதாநாயகன். தந்தை கண்டிப்பானவர். கர்நாடக சங்கீதத்தில் கொடிகட்டிப் பறப்பவர். கடுமையான சாதீயப் பார்வை கொண்டவர். கூடவே நேரம் தவறாமையை முழுமையாகக் கடைபிடிப்பவர். தனது மூத்த மகன் வாய்பேசாதவன் ஆனதால் கமலை தனது இசை வாரிசாகக் கொண்டு வர முயல்கிறார்.

கமலுக்கோ இசையை விட சமூகம் பிடித்திருக்கிறது. சாதீய முறை பிடிக்கவில்லை. வேறு சாதிப் பெண்ணை நேசிக்கிறான். நேரம் தவறாமையை விட நேயம் தவறாமையே அவனுக்கு முக்கியமாய்ப் படுகிறது. அதனால் வீட்டை விட்டு வெளியேற்றப்படுகிறான். தந்தையின் பெயரைப் பயன்படுத்தாமலேயே ஊரை தூய்மையாக்கி, குடிகாரர்கள் இல்லாத ஊராய் மாற்றி சிறந்த இந்தியனாய் பெயர் பெறுகிறார்.



மகனின் உயர்வைப் பார்த்த தந்தை , 'நான் இவனுடைய தந்தை' என பெருமை கொள்கிறாள். மகன் காதலித்த கீழ்சாதி என அழைக்கப்படும் பெண்ணையே திருமணம் செய்து வைக்க ஒத்துக் கொள்கிறார்.

உன்னால் முடியும் தம்பியின் கதைக் களமும், வறுமையின் நிறம் சிவப்பு கதைக் களனும் கிட்டத்தட்ட ஒன்று தான். இசைக் குடும்பம். தந்தையின் கண்டிப்பு. இசை தெரிந்த மகன், இசையை விட்டு விலகிச் செல்கிறான். சமூகம் குறித்த பார்வை கொள்கிறான். என பல்வேறு ஒற்றுமைகள் இரண்டு பட களங்களிலும் நேர்ந்தன.

கலையைத் தாண்டி கே.பாலசந்தர் சமூகத்துக்கான பங்களிப்பாய்ச் செய்த படங்களின் பட்டியலில் இந்தப் படம் நிச்சயம் இடம் பிடிக்கும். நல்ல செய்தியைச் சொல்லி, வெற்றி பெற்ற சிறந்த படம் உன்னால் முடியும் தம்பி.

### புதுப் புது அர்த்தங்கள்

சென்ற ஆண்டு உன்னால் முடியும் தம்பி என்றால் 1989ல் 'புதுப் புது அர்த்தங்கள்'. ஒரே ஒரு படம் தான் இந்த ஆண்டு பாலசந்தரின் கைகளிலிருந்து கிடைத்தது. அது புதுப்புது அர்த்தங்கள்.

ரஹ்மான் சித்தாரா இணையுடன், கீதா, ஜனகராஜ், ஜெயசித்ரா, பூர்ணம் விஸ்வநாதன், சௌகார் ஜானகி, விவேக் மற்றும் இளையராஜா நடித்திருந்தார்கள்.

பாலசந்தர் தனது வழக்கமான பாணியை விட்டு விலகி, குடும்ப வாழ்க்கையின் எதார்த்தங்களின் அடிப்படையில் எடுத்த ஒரு படம் என இந்தப் படத்தைச் சொல்லலாம். பிரபல பாடகனான கணவன். கணவனை அதீதமாய் நேசிக்கும் மனைவி. கணவனுக்கு நிறைய பெண் தோழிகள் உண்டே என பயப்படும் மனைவி. அதனால் ஏற்படும் சிக்கல்கள்.

கணவனால் மன அழுத்தத்துக்கு உள்ளாகித் தப்பிக்கும் ஒரு பெண்ணும், கதாநாயகனும் சந்தித்துக் கொள்கிறார்கள். அவர்களுக்குள் காதல் உருவாகிறது. வாழ்க்கையின் உணர்ச்சிகரமான நகர்வுகளுக்குப் பின், இரண்டு தம்பதியரும் அவரவர் சொந்த வாழ்க்கையில் இணைகிறார்கள். சுபம் !!!

இசையை மையமாகக் கொண்ட இந்தப் படத்தின் பாடல்கள் படத்தின் மிகப்பெரிய ஹைலைட் ஆக இருந்தன. குருவாயூரப்பா குருவாயூரப்பா, கல்யாண மாலை கொண்டாடும் பெண்ணே, கேளடி கண்மணி போன்ற பாடல்கள் காலத்தைத் தாண்டி காதுகளில் ரீங்காரமிடும் தன்மை கொண்டவை.



1990ம் ஆண்டும் பாலசந்தர் இயக்கத்தில் ஒரே ஒரு படம் தான் வெளியானது. அதிக எண்ணிக்கையில் படம் எடுப்பதை பாலசந்தர் நிறுத்தி விட்டு ஆண்டுக்கு ஒரு படம் எனும் அளவில் சுருக்கிக் கொள்ள ஆரம்பித்திருந்தார்.

ஒரு வீடு இரு வாசல், இது தான் பாலசந்தர் 1990ம் ஆண்டு இயக்கிய திரைப்படம். இரண்டு வெவ்வேறு கதைகளை இரண்டு படமாக எடுத்து அதை ஒரு நேர்கோட்டில் ஒரு படமாய் இணைக்கும் புதுமையான உத்தியை இந்தப் படத்தில் பாலசந்தர் பரிசோதித்துப் பார்த்தார்.

'என்னைப் பொறுத்தவரை நான் இயக்கும் எல்லா படங்களும் நல்ல படங்களே. சில படங்கள் ரசிகர்களுக்குப் பிடிக்காமல் போய்விடுகின்றன. அது அவர்களுடைய உரிமை. ஆனால் அதற்காக எனது பார்வையை நான் விட்டுக்கொடுக்க முடியாது' என்பார் பாலசந்தர். அனுராதா ரமணனின் கதைக்கு திரைக்கதை வடிவம் கொடுத்து பாலசந்தர் இயக்கியிருந்தார். படம் வணிக ரீதியாக வெற்றி பெறவில்லை. ஆனால் நல்ல விமர்சனங்களைச் சம்பாதித்துக் கொடுத்தது. தேசிய விருதையும் சொந்தமாக்கியது.









# Shakthy Foundation

## துவாரகமாய் முதியோர் இல்லம்

SHAKTHY FOUNDATION

சீரடி பாபாவின் அருளால் ஜேர்மனி பிராங்க்பர்ட் நகரில் 01.10.2020 ஆம் திகதி துவாரகமாய் முதியோர் இல்லம் உருவாகியுள்ளது. எமது அனர்பார்ந்த சகோதர சகோதரிகளே உங்களுக்கு ஓர் நற்செய்தி. உங்கள் பெற்றோரை உங்களைப் போலவே அன்பாக அரவணைத்து பராமரிப்போம் கவலையை விடுங்கள் பிராங்க்பர்ட் நகரில் 01.10.2020 ஆம் தகதி முதல் துவாரகமாய் முதியோர் இல்லம் அமைந்துள்ளது. இங்கு தமிழில் உரையாடி நமது தமிழ் உணவுடன் முதியவர்கள் பராமரிக்கப்படுகின்றார்கள். இதற்கு அருகாமையில் அழகான பூங்கா மற்றும் ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம் மற்றும் சித்தி விநாயகர் ஆலயம் அமைந்தள்ளது. இல்லத்தினால் பெறும் வருமானங்கள் 28.03.2018 திரு. திருமதி. நவநீதன் றிஷாந்தியாவினால் இலங்கையில் உருவாக்கப்பட்ட மாணவர் விடுதிக்கு செலவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்விடுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள பல மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள்.

**முதியவர்களால் இளையோர்கள் வளர்க்கப்படுகின்றனர்.**

**கல்வியால் உயர்த்துவோம் எமது புதிய தலைமுறையை**

தொடர்புகளுக்கு:-
Dwarakamal Senioren WG
Alpenroder Str.59 65936 Frankfurt am Main, Germany
Tel: 0152-14069504 Mrs.Nava (Resha)

Shakthy Foundation | Acc No: 173020027815
HATTON NATIONAL BANK | Trincomale, Srilanka





Shakthy Foundation
T/M/Chennaiyoor,
Central College,
Mutur, Trincomale,
Srilanka.
S.Rajathurai
+94 77 338 4637



# போலோவை காதலிக்கும் அஞ்சலி

அங்காடித் தெரு படம் மூலம் தமிழ் சினிமாவில் பிரபலமானவர் அஞ்சலி. நடிகை அஞ்சலிக்கு தனது நாய்க் குட்டி போலோ மீது அலாதி பிரியம்.

அதன் பிறந்தநாளுக்காக புகைப்படப்பிடிப்பு நடத்தி இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில் ''நீ என்னுடைய வாழ்க்கையில் வந்த பிறகு நான் மிக மகிழ்ச்சியாகவும், ஆசீர்வதிக்கப்பட்டதாகவும் உணருகிறேன்'' என்றென்றும் நீ எனக்கு அன்புக்குரிய தோழன் ஆவாய்.

நீ எனக்கு அளவு கடந்தஅன்பையும் நான் வீட்டுக்குள் நுழையும் போது நிறைய முத்தங்களையும் கொடுத்திருக்கிறாய், ஐ லவ் யூ போலோ என பதிவிட்டுள்ளார்.


# 'அண்ணாத்த' ஜனவரியில் ஆரம்பம்

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் சிறுத்தை சிவா இயக்கத்தில் சன் பிக்சர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பில் உருவாகி வந்தது 'அண்ணாத்த' திரைப்படம்.

இந்த படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்த நிலையில் திடீரென கொரோனா வைரஸ் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக படப்பிடிப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

இப்போது தளர்வுகள் அறிவிக்கப்பட்டு பல படங்களின் படப்பிடிப்புகள் தொடங்கப்பட்டு விட்டாலும் அண்ணாத்த படத்தின் படப்பிடிப்பு மட்டும் தொடங்கவில்லை.

இதற்கு ரஜினியின் உடல்நிலைதான் முக்கியக் காரணம் என சொல்லப்பட்டது.இந்நிலையில் இப்போது அடுத்த கட்டமாக ரஜினி சம்மந்தப்பட்ட காட்சிகளை 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் படம்பிடிக்க உள்ளதாக சொல்லப்படுகிறது.






# பிரியங்கா சோப்ராவின் "வீ கேன் பி ஹீரோஸ்"

"வீ கேன் பி ஹீரோஸ்'' என்கிற ஆங்கிலப் படத்தில் பிரியங்கா சோப்ரா நடித்துள்ளார்.

ராபர்ட் ரோட்ரிகஸ் இயக்கியுள்ள இந்தப் படம் புத்தாண்டு தினத்தில் நெட்பிளிக்ஸில் நேரடியாக வெளியாகவுள்ளது. இப்படத்தின் புகைப்படங்களை பிரியங்கா சோப்ரா வெளியிட்டுள்ளார்.

# த்ரிஷாவுக்கு மீண்டும் திருமணம்



தனது திருமணம் காதல் திருமணமாகவே இருக்கும் என்று நடிகை த்ரிஷா கூறியுள்ளார். தமிழ், தெலுங்கு, மலையாளப் படங்களிலும் நடித்து வருபவர், முன்னணி நடிகை த்ரிஷா.

இப்போது தமிழ், மலையாளத்தில் நடித்து வரும் அவர் தனது திருமணம் பற்றி மீண்டும் கூறியுள்ளார்.கடந்த சில வருடங்களுக்கு முன் தயாரிப்பாளர் வருண் மணியனை காதலித்தார் நடிகை த்ரிஷா.

இருவருக்கும் திருமணம் செய்து வைக்க குடும்பத்தினர் முடிவு செய்தனர். திருமண நிச்சயதார்த்தம் நடந்து முடிந்த நிலையில், திடீரென திருமணம் நின்றுபோனது.

கருத்துவேறுபாடு காரணமாக நின்றுபோனதாக அப்போது கூறப்பட்டது. இது பரபரப்பாகப் பேசப்பட்டது.இதுபற்றி அவர் கூறியிருப்பதாவது; என் திருமணம் பற்றி முன்பே முடிவு செய்ததைத்தான் இப்போதும் சொல்கிறேன். என்னை

முழுமையாகப் புரிந்து கொள்பவரை திருமணம் செய்து கொள்வேன். அது காதல்

திருமணமாகவே இருக்கும். அப்படி ஒருவரை சந்திக்கும்போது திருமணம்

நடக்கும். தனியாக இருப்பது பற்றி கவலைப் படவில்லை.ஒரு வேளை அப்படி ஒருவரைச் சந்திக்கவில்லை என்றால், இப்படியே இருந்து விடுவேன்.



# கமல் இல்லாத மருதநாயகம்?

மருதநாயகம் கமலின் கனவுப் படங்களில் ஒன்று. இந்த படத்துக்காக இங்கிலாந்து மகாராணியை எல்லாம் வரவைத்து படபூஜை நிகழ்த்தினார் கமல்.

30 நிமிடங்கள் வரை ஓடும் காட்சிகளையும் எடுத்து முடித்து ஒரு பாடலையும் ரிலீஸ் செய்தார். ஆனால் அதன் பின் பொருளாதார காரணங்களால் இந்த படம் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் இப்போது அந்த படத்தை கமல் மீண்டும் இயக்க உள்ளதாக சொல்லப்படுகிறது. ஆனால் நாயகனாக அவர் நடிக்காமல் வேறு கதாநாயகனை வைத்து அவர் இயக்குவார் என சொல்லப்படுகிறது.





EurAsian-Tour
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
EurAsian-Tour
Further Str.146
41462 Neuss
Tel:02131 7387 83 Fax:02131 73 87 84
info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
VALUTRANS MONEY TRANSFER


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
"Jasmine Silk House"
Fester Str.50-
40882 Ratingen
Tel: 02102 844744
HP: 0173 1937 325


Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
Ria Money Transfer
VALUTRANS MONEY TRANSFER
MoneyGram.
உரிமையாளர்: பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303
Fax: 02161-309282


Stuttgart நகரில்...
PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Ludwig str.87a
70197 Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்ரேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
Tel: 0711 615 8976/ 0170 334 4059


before
after
Nachher
VS
G.Vijay Home Designer
உங்கள் வீடுகளை சிறப்பாக வடிவமைக்க நாடுங்கள்!
Sauber- Professuonell- Punktlich- Preiswert
Web.www.vijay-home-designer.de
சிறந்த தொழில்
தேர்ச்சிபெற்றவர்களால்
குறித்த நேரத்தில் குறைந்த செலவில்
நேர்த்தியாகச் செய்து தரப்படும்
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
Kleiststrasse 07
41844 Wegberg
Germany
Facebook:
Vijay Home Designe Gunaratnam 0176 7221 8466
inh.: Gunaratnam Vijayakumar
Telefon: +49 176 72 21 84 66
e.mail: G.Vijay@outlook.de


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
புதிய இடத்தில்!! புதிய பொலிவுடன்!!
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 68, 60329 Frankfurt am Main
சரவணபவன்
SARAVANAA BHAVAN
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.


Double Horse
Nila
AGAM
அகம்
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
BTM
Aachi
Rabeena
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
Tel: 0231 860 26 96